விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள் : இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 20 புதன்கிழமை (05.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 352

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து




## யாழ்.நகரில் திரண்டு கண்டன முழக்கம்!

### தமிழ் அரசியல் கட்சிகள் பல பங்கேற்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நேற்று யாழ்.நகரில் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்தக் கண்டனப் ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் நவ சமசமாஜக்கட்சி, புதிய ஜனநாயக மார்க்சிஷ லெனினிசக் கட்சி என்பன ஆதரவளித்திருந்தன.

கைது செய்யப்பட்ட மாணவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும், பல்கலைக்கழக வளாகத்தில் இராணுவ ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும், பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும், கல்விச் செயற்பாடுகளில் இராணுவத் தலையீடு உடன்நிறுத்தப்பட வேண்டும், இராணுவம் எமது தேசத்தை விட்டு உடன் வெளியேற்றப்பட வேண்டும் என ஐந்து பிரதான கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கைகளில் எதிர்ப்பு பதாகைகளையும் தாங்கி நின்றனர்.

அரச பயங்கரவாதம் எமக்கு வேண்டாம், மாணவர்களை விடுதலைசெய், இராணுவமே மாணவர்கள் (02ஆம் பக்கம் பார்க்க)

# ஒன்றரை இலட்சம் இராணுவம் வட பகுதியில் குவிப்பு!

### குற்றஞ்சாட்டுகிறார் சுரேஷ் எம்.பி.



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இராணுவத்தினரின் எண்ணிக்கை இரண்டு இலட்சம். அதில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவம் வடக்கு மாகாணத்தில் குவிக்கப்பட்டுள்ளது. இது இராணுவ அடக்கு முறையை பிரயோகித்துள்ள குடும்ப ஆட்சியை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ பீட மாணவன் நேற்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நான்கு பேரில் ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவனான கணேசமூர்த்தி சுதர்சன் என்ற மாணவனே விடுதலை செய்யப்பட்டவராவார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடன் பேச கூட்டமைப்பு செல்லாது

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கடந்த 2ஆம் திகதி அழைப்பு விடுத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (02ஆம் பக்கம் பார்க்க)

## மௌனமாக இருந்தால் அடிமைகளாகி விடுவோம்

### பல்கலை. ஆசிரியர் சங்கத் தலைவர் உரை

(யாழ்ப்பாணம்)

அரசினால் எமக்கு இழைக்கப்படும் அநீதிகளினை தட்டிக் கேட்காமல் நாம் மௌனித்திருந்தால் தொடர்ந்தும் நாம் அடிமைகளா கவே வாழவேண்டும் என யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஆர்.இராசகுமாரன் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கக் கோரி நேற்று (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மாணவர்களை புலிகளாக்கி விட்டோம்!

### சிங்கள மாணவி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்கள் என்றுமே எம்மால் வெல்லப்பட முடியாதவர்கள் என்ற உண்மையை முழுமையாக உணர்ந்தேன். இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவி ஒருவர் டுவிட்டரில் தனது கருத்தை பதிவு செய்துள்ளார் என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ளதாவது; (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கும் நீதித்துறைக்கும் இடையில் உச்சம் பெறும் மோதல்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க குற்றஞ் சாட்டப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என அரச தரப்புக்கு ஆதரவாகவும், நீதித்துறையில் அரசின் தலையீட்டை எதிர்த்து தலைமை நீதிபதிக்கு ஆதரவாகவும் போராட்டங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

தம் மீதான குற்றச்சாட்டை விசாரித்துவரும் நாடாளுமன்ற தேர்வுக்குழுவின் முன்னர் தலைமை நீதிபதி 2ஆவது முறையாக நேற்று ஆஜரானார். (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ரஷ்யா உதவும்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கைக்குத் தொடர்ந்து ரஷ்யா உதவும் என இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் அலெக்சாண்டர் ஏ.கர்ச்சாவா தெரிவித்தார்.

இந்தப் பேரவையில் அடுத்த வருடம் ரஷ்யா அங்கத் (02ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக சூழலில் உள்ள இராணுவம் அகற்றப்படும்!

### யாழ்.கட்டளைத்தளபதி உறுதி

(யாழ்ப்பாணம்)

தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதோடு பல்கலைக்கழகத்தை சூழவுள்ள பகுதிகளில் போடப்பட்டுள்ள பாதுகாப்பு கடவைகள் மற்றும் இராணுவத்தினரை அங்கிருந்து அகற்றுவதாக யாழ்.மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உறுதியளித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ். நகரில் திரண்டு...

கல்வியைக் குழப்பாதே!

இலங்கை இராணுவமே மாணவ விடுதிக்குள் உனக்கு என்ன வேலை!

தமிழ் மாணவர்கள் சுதந்திரமாய் கல்வி கற்க இடையூறு செய்யாதே எம் உயிர்களைப் பறிக்கும் பகைவனே எம் உணர்வுகளை என்ன செய்யப் போகின்றாய்!

இனப்படுகொலை இராணுவமே உன் அராஜகத்தை உடன் நிறுத்து!

பறிக்காதே பறிக்காதே ஊடக சுதந்திரத்தைப் பறிக்காதே! அப்பாவி மாணவர்களை கைது செய்யாதே!

ஸ்ரீ ரெலோ இயக்கமே உனது துரோகத்தனத்தை நிறுத்து.

தாக்காதே! தாக்காதே! எம் மக்களைத் தாக்காதே!, மாவீரர்களை நினைவு கூரவிடு!

துயிலும் இல்லங்களை விட்டு வெளியேறு!, அரசே ஜனநாயகத்தை மதித்து நட, அரசே ஜனநாயகம் மனித உரிமை மக்களின் அடிப்படை உரிமை!

இராணுவமே எமது மண்ணை விட்டு வெளியேறு!, பல்கலைக்கழகம் கொலைக் களமா!

தமிழ் மக்களை அடக்கி ஆள்வது தான் மகிந்தவின் இலட்சியமா!

ஊடக சுதந்திரம், பேச்சு சுதந்திரம் எமக்கு வேண்டும், அரசே அரசியல் கைதிகளை விடுதலை செய்ய விரைந்து நடவடிக்கை எடு!

போன்ற பல எதிர்ப்புப் பதாகைகளைத் தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், அக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், ஈ. சரவணபவன் ஆகியோரும்,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், அக் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பத்மினி சிதம்பரநாதன், அக்கட்சியின் உறுப்பினர் மணிவண்ணன்,

ஏனைய கட்சிகளின் தலைவர்கள், கட்சி உறுப்பினர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதேச, நகர சபை, மாநகர சபை உறுப்பினர்கள், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்குகொண்டு இருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எந்த வகையிலும் இடையூறு ஏற்படாத வகையில் யாழ்ப்பாணம் பொலிஸார் நடந்துகொண்டதோடு இராணுவப் பிரசன்னமும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும் இராணுவ வாகனங்களின் பிரசன்னம் காணப்பட்டதோடு இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரின் எண்ணிக்கை சற்று அதிகரித்து காணப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் அளவிற்கு வேடிக்கை பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் காணப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர்கள் கறுப்பு உடை அணிந்து தமது எதிர்ப்பை தெரிவித்திருந்தனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் மீது கடந்த 28ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தடியடித் தாக்குதல் சம்பவத்தின் போது ஊடகவியலாளர்களும் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தனர். அத்தோடு அவர்களது ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

இதற்கு எதிராகவே ஊடகவியலாளர்கள் கறுப்பு உடை அணிந்து எதிர்ப்பு தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4,6)

# பல்கலைக்கழக சூழலில்...

யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளுடனான சந்திப்பின் போது இவ் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் பல்கலைக்கழக பீடாதிபதிகள் உள்ளிட்ட குழுவினர் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியை நேற்றுப் பிற்பகல் யாழ் பலாலியில் பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்கள். இதன்போது பல்கலைக்கழக சமூகத்தினரால் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய மூன்று மாணவர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் போடப்பட்டுள்ள பாதுகாப்புக் கடவைகள் அகற்றப்பட வேண்டும் எனக் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இவர்களுடனான சந்திப்பினை அடுத்து ஊடகவியலாளர்களுக்கு யாழ் இராணுவ கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிக்குள்ளும் பல்கலைக்கழகத்தினுள்ளும் இராணுவத்தினர் தேவை கருதியே நுழைந்திருந்தனர்.

இருப்பினும் எதிர்வரும் காலங்களில் அவ்வாறு பல்கலைக்கழகத்தினுள் இராணுவத்தினர் செல்ல மாட்டார்கள். செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் நிர்வாகத்தினரின் அனுமதி பெற்றே உட்செல்வார்கள்.

அத்தோடு பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு மாணவர்களில் ஒருவர் இன்று (நேற்று) விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஏனைய மூன்று மாணவர்களையும் விடுதலை செய்வது தொடர் பாக அந்தத் திணைக்களத்துடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை குழப்பும் வகையில் பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் போடப்பட்டுள்ள பாதுகாப்பு கடவைகள் மற்றும் இராணுவத்தினர் உடனடியாக அகற்றப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# ஜனாதிபதியுடன்...

நேற்றைய தினம் நடைபெறவிருந்த இந்தப் பேச்சுவார்த்தைகளின் கலந்து கொள்ளப்போவதில்லை என கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

வேறு திகதியில் பேச்சுவார்த்தைகளை நடத்த சந்தர்ப்பம் வழங்குமாறு கோரியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அடுத்த வாரமளவில் வேறு ஓர் தினத்தில் இந்த சந்திப்பினை நடத்த ஏற்பாடு செய்வார் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (எ-11)

# இலங்கைக்கு ...

துவம் பெறாவிட்டாலும் தொடர்ந்து உதவும் என அவர் குறிப்பிட்டார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீ மிற்கும் ரஷ்ய தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நீதி அமைச்சில் இடம்பெற்றது. இதன்போதே தூதுவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன் கொழும்பு 7, எம்.எச்.எம். அஷ்ரப் மாவத்தையில் உள்ள பள்ளிவாசல் புதிய ரஷ்ய தூதரக வளவை அண்மித்ததாக உள்ளதால் தூதரகத்தின் புதிய கட்டிடம் அமையும் போது ஏற்படக் கூடிய நடைமுறை பிரச்சினை பற்றியும் தூதுவர் எடுத்து கூறினார்.

எனினும் இது நகர அபிவிருத்தி அதிகார சபையோடு சம்பந்தப்பட்டதாக இருப்பதால், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரோடு இது பற்றி கலந்துரையாடுவதாக அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டார்.

இது சமயம் சம்பந்தப்பட்ட இந்த விவகாரம் என்பதால் உணர்வு பூர்வமாகவும் பொறுப்புணர்ச்சியோடும் அணுகப்பட வேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-11)


**பிள்ளையார் இன்**

50% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 50 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 70/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 70/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829



**மனோதத்துவ வைத்தியம்**

**(General Psychotheraphy)**

**பிரபல மனோதத்துவ நிபுணர்**

Dr.P.ஆறுமுகம் T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

03.12.2012 முதல் 10.12.2012 வரை 8 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற் கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(அ-1662)



- தபால் மூலம் -

**ஆறு மாத கால டிப்ளோமா**

**Course Length - Six Month**

Nov 2012-Apr 2013

24

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.12.2012

(C-1670)



செல்லா சினிமா யாழ்ப்பாணம்



A/C DIGITAL dts SURROUND

துப்பாக்கி

விஜய், காஜல் அகர்வால் மற்றும் பலர் நடிப்பில்

10.30, 2.30, 6.30, 9.30



வங்கியியல் கற்கை நெறி

**CBF**

கற்பிக்கப்படும்.

Tel : 077 3586 563

(100)



**COMPUTER FOR SALE**

Tel : 021-222 4459, 0772533390

Intel Processor 3.00 GHz
Intel LGA Mother Board
1GB DDR II Kingstan Ram
80 GB Hitachi Sata Hard Disk
Samsung DVD Multy Recorder
ATX Casing with Power Supply
15" HP / Compaq LCD Monitor
Keyboard, Optical Mouse & Pad,
2.1 Laptop Woofer இவை அனைத்தும்:
Rs-19500 (Six Month Warranty)

(C-1671)

North Lead Computer Sales & Services


328, Stanly Road, Jaffna (... சந்திக்கு அருகில்)



**நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவுகள்**

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக்கூடியவாறு துரித சேவை....

| கட்டணங்கள் | (1Kg) இற்கு |
|---|---|
| லண்டன் | 1500/- |
| கனடா | 2600/- |
| சுவிஸ் | 1200/- |
| அவுஸ்திரேலியா | 1000/- |
| ஜேர்மனி | 1000/- |



(சுவிஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கான பொதியின் நிறை. 5 kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

சாதாரண சேவை 1 kg க்கு : கனடா 700/- லண்டன் 600/-

(பொதிகள் நிறை 5 Kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

குறிப்பு: ஆவணங்கள், கடிதங்கள் அனுப்புவதற்கு விசேட கட்டணம்

லண்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு

500 கிராமுக்கு 2000 ரூபா மட்டுமே...!

3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி உங்கள் பிரதேசங்களில் உள்ள பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் பொதிகளை ஒப்படைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

சங்கானை : திருமகள் தொலைத் தொடர்பு: 021 225 0061
நெல்லியடி மருதம் கொமினிகேசன் 021 226 3210
வல்வெட்டித்துறை: V2 Travels and Tours 021 2055044
கோண்டாவில்: பாரதி கொம். 021 222 5148
உரும்பிராய் : அருள் விநாயகர் கொமினிகேசன்021 223 0623, 0775228428
பண்டத்தரிப்பு: Paint City, 021 7429390
பிரவீனா, சுன்னாகம் Supper Market 0750480238, 0777416508

(சி-1670)

மேலதிக தொடர்புகளுக்கு:

**Rain Bow Travels**

இல.30/2. 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0212219596


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அரசரின் வைர மோதிரம்

ஒரு ஊரிலே வயதான அரசர் ஒருவர் இருந்தார்.

அவரது உள்ளத்தில் எப்போதுமே கவலையும் பயமும் குடி கொண்டிருந்தது.

மரணப் பயம் அவரை வாட்டி வதைத்தது. அதனால் அவரால் இரவில் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை.

ஏற்கனவே போர்க்களங்களில் எத்தனையோ வீரர்களை ஓடஓட விரட்டியவர் இப்போது துணிச்சல் இன்றி முடங்கிக் கிடக்கிறார்.

"என்ன செய்யலாம்?" என்று அரசனுக்கு ஒரே யோசனை.

பின்னர் அவர் அனைத்து அமைச்சர்களையும் அழைத்து, "எனக்கு ஓர் ஆலோசனை சொல்லுங்கள்" என்று கேட்டார்.

அமைச்சர்கள் ''என்ன ஆலோசனை?'' தேவையென வினவினார்கள்.

''எனக்கு ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டு விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த நேரத்தில் நீங்கள் யாருமே ஆலோசனை சொல்வதற்கு என் பக்கத்தில் இல்லை என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சமயத்தில் எனக்கு உபயோகப்படும் வகையில் ஒரு வாசகம் "பொன்மொழி சொல்லுங்கள்" அதை நான் என்னுடைய வைர மோதிரத்தின் அடியில் பதித்து வைத்துக் கொள்வேன்" என்றார் அரசர்.

அவர் கையில் போட்டிருந்த வைர மோதிரமும் அதற்குத் தகுந்த மாதிரி திறந்து மூடுவது போல் அமைந்திருந்தது.

இதையிட்டு அமைச்சர்களுக்கு ஒரே யோசனை.

ஒருவருக்கும் ஒன்றும் சரியாகத் தோன்றவில்லை... குழப்பமாக இருந்தது.

அந்த நேரத்தில் பெரியவர் ஒருவர் அங்கே வந்தார்.

அவர், ''நான் அரசர் கேட்டதற்குப் பொருத்தமாக ஒரு வாக்கியம் சொல்வேன். ஆனால், ஒரு நிபந்தனை. அதை யாரும் ஆர்வமாக அவசரப்பட்டு படிக்கக்கூடாது. அதை இரகசியமாக அந்த மோதிரத்தினுள் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். ஏதாவது அவசர நிலைமையின் நிமிர்த்தமே மோதிரத்தைத் திறந்து பார்க்க வேண்டும்'' என்று தெரிவித்தார்.

பெரியவரின் நிபந்தனையை அரசர் உட்பட அமைச்சர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள்.

பெரியவர் கூறிய வாக்கியத்தை இரகசியமாக மோதிரத்திற்குள் பதித்து மூடினார்கள். அரசர் அதைத் தன் விரலில் மாட்டிக் கொண்டார்.

நாட்கள் நகர்ந்தன. அந்த அரசனுக்கு ஒரு சோதனை வந்தது.

இவர் மீது அயல்நாட்டு மன்னன் படையெடுத்தான். அவன் இவரிடம் ஏற்கனவே தோற்றுப் போனவன். இப்போது புதுத் துணிச்சல் பிறந்து சண்டையில் வென்று விட்டான்.

இவர் தன் நாட்டை இழந்தார். அனைத்து செல்வங்களையும் இழந்தார். ஒரு அடிபட்ட குதிரையில் ஏறித் தப்பிச் சென்றபோது அவரைப் பகைவர்கள் பின் தொடர்ந்து துரத்தினார்கள்.

அவ்வேளையில் ஒரு மலையுச்சிக்குச் சென்று விட்டார். அதற்கப்பால் செல்ல முடியாது. பெரிய பள்ளம். அது உல்லாசப் பயணிகள் வந்து கண்டுகளிக்கும் இடம். தற்போது இவருக்கு அந்த இடம் மரணப் பயணத்தின் வாசலாக அமைந்து விட்டது. அங்கிருந்து அவரால் திரும்ப முடியாது. அவ்வளவு குறுகிய பாதை. அந்தச் சமயத்தில் சூரிய ஒளி மோதிரத்தில் பட்டு மின்னியது. உடனே இவருக்கு மோதிரத்தின் அடியில் வைத்த வாசகம் நினைவுக்கு வந்தது. இவர் மோதிரத்தைத் திறந்து படித்தார். அதில் "இந்த நிலையும் மாறி விடும்" "(This too will pass away)" என்ற வாசகம் இருந்தது.

அதைப் படித்த மன்னருக்கு தைரியம் ஏற்பட்டது. ''இப்போது அவரைத் துரத்தி வந்தவர்களும் திசை மாறி சென்று விட்டார்கள். அவர்கள் என்னைத் துரத்தி வராவிட்டால், இவ்வளவு அழகான ஓர் இடம் இருப்பது எனக்குத் தெரியாமல் போய் இருக்கும் என்று அரசன் நினைத்தான்.

இப்போது அமைதியாக இருந்து அந்த இயற்கை வனப்பை ரசிக்கிறார் அரசர்.

மீண்டும் அரசன் நாடு திரும்பி, படைகளைத் திரட்டி படையெடுத்த அயல்நாட்டு மன்னனை வெற்றி கொள்கிறார்.

இதை அறிந்த மக்கள் வரவேற்பு விழாவைத் தடல்புடலாக நடத்தினர். ஆடல், பாடல் அனைத்தும் கோலாகலமாக இருந்தது.

இவை அனைத்தையும் பார்த்த அரசனுக்கு "நம்மை இனிமேல் எவராலும் வெற்றி கொள்ள முடியாது" என்று நினைத்தார். இப்போது அகம்பாவம் அவரை இலேசாக எட்டிப் பார்த்தது.

அந்த வேளையில் சூரிய ஒளி பட்டு மோதிரம் மீண்டும் மின்னியது.

அதைத் திறந்து அரசர் மறுபடியும் வாசிக்கிறார். "இந்த நிலையும் மாறிவிடும்" என்று அதில் இருந்தது.

அவ்வளவுதான். அவரது மனம் அடங்கியது. ஆணவம் நீங்கியது.

இதிலிருந்து நாம் ஒன்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால், இங்கே எதுவுமே நிரந்தரமில்லை.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தும் விஞ்ஞான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் வடமாகாண பாடசாலைகளுக்கிடையே சமூக வலுவூட்டலுக்கான கல்வி என்ற கருப்பொருளுக்கமைவாக விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளதாக யாழ்ப்பாண விஞ்ஞான சங்க உதவிப் பொதுச் செயலாளர் கலாநிதி பா.நிமலதாசன் அறிவித்துள்ளார்.

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் நடைபெறும் இப்போட்டிகளில் வினா விடைப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதியும் கட்டுரைப்போட்டி, பேச்சுப் போட்டி ஆகியன பெப்ரவரி மாதம் முதலாம் திகதியும் வினா விடை இறுதிப் போட்டி பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதியும் நடைபெறும்.

சுவரொட்டிப் போட்டி, சித்திரப் போட்டி அல்லது விஞ்ஞானப் புத்தாக்கம் உள்ளடங்கலான கண்காட்சிப் போட்டி மார்ச் மாதம் முதலாம் திகதியும் விபரணப்படப் போட்டி பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதியும் பாடசாலைத் தோட்டப் போட்டி பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியும் நடைபெறும்.

போட்டிகள் நடைபெறும் இடங்கள் தொடர்பான தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படுமென்பதுடன் விண்ணப்பப்படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கலாநிதி பா.நிமலதாசன், உதவிப் பொதுச் செயலாளர்/ யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், கணக்கியல் துறை, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-9)

# பாடசாலைகள் சோபை இழந்தன

(பூந்தோட்டம்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஆசிரியர் தொழிற்சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆசிரியர்கள், அதிபர்கள் சுகவீன விடுமுறை போராட்டம் வவுனியா மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற நிலையில் சில ஆசிரியர் சங்கங்களை சேர்ந்த ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் பதிவேட்டில் கையொப்பமிட்டு கடமைக்கு சென்றிருந்தனர். இது தொடர்பில் பாடசாலை அதிபர்கள் கருத்து தெரிவிக்கையில்,

அதிபர், ஆசிரியர்கள் நேற்று சுகவீன போராட்டத்தை மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்ட நிலையில் சில ஆசிரியர்கள் கடமைக்கு வந்திருந்தனர். எனினும் அவர்களை தடுத்தல் கூடாது என்ற காரணத்தினால் அவர்கள் பதிவேட்டில் கையொப்பிட அனுமதிக்கப்பட்டனர். எனினும் மாணவர்கள், ஆசிரியர்கள் வரவின்மையால் பாடாலையை விட்டு காலையிலேயே சென்று விட்டனர். இதன்காரணமாக கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. எனினும் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சைகள் வழமைபோன்று இடம்பெற்றிருந்தது எனவும் தெரிவித்தனர். (அ-9-266)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 130 | 160 | 160 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 240 | 260 |
| தக்காளி | 100 | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 |
| கோவா | 70-80 | 90 | 100 | 90 |
| கரட் | 100 | 80 | 120 | 160 |
| பூசணி | 50-60 | 60 | 60 | 60 |
| புடோல் | 40 | 60 | 120 | 80 |
| வாழைக்காய் | 70-80 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 120-140 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 130 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 120 | 80 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 100-120 | 160 | 120 | 100 |
| லீக்ஸ் | 90-100 | 90 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 120 | 120 | 140 |
| கறிமிளகாய் | -- | 200 | 160 | 200 |
| முருங்கைக்காய் | -- | 350 | 150 | -- |
| போஞ்சி | 160 | 160 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 120 | 170 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 38 | 30-35 |

# இராசி பலன்

*05.12.2012*
*(கார்த்திகை 20, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.17 மணிக்கு*
*சப்தமி பின்னிரவு 4.50 மணிவரை*
*மகம் பின்னிரவு 3.38 மணிவரை*
*இராகுகாலம் 12.17-1.47 மணிவரை*
*சுபநேரம் 4.47-6.17 மணிவரை*
*ஆறுமுகநாவலர் குருபூசை*

**மேடம்** வருங்கால நலன்கருதி சேமிக்க நினைப்பீர்கள், சுயமுயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், புண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**இடபம்** ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் அதிகரிக்கும், வாகன யோகத்தால் வளம் காணும் நாள், தாய்வழி ஆதரவு பெருகும்.

**மிதுனம்** சகோதர ஒற்றுமை பலப்படும், எடுத்த காரியம் கைகூடும், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், வாக்கு மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும், கௌரவமான நாள்.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**சிங்கம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மூத்தவர்களால் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், போசன நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**கன்னி** அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் அமைதி ஏற்படும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**துலாம்** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புண்டு, பணப் புழக்கம் திருப்தி தரும் விதத்தில் அமையும், நண்பர்கள் சந்திப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் உதவி செய்ய முன்வருவர், எடுத்தகாரியம் கைகூடும், ஆரோக்கியமான நாள், போசன நன்மையுண்டு.

**தனுசு** திடீர் பயணங்களால் நன்மையுண்டு, வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, எதையும் சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** செல்வாக்கான நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், புதிய உறவுகள் தேடி வரலாம்.

**மீனம்** தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நினைத்த காரியங்களை நினைத்த நேரத்தில் முடிக்கும் எண்ணம் தோன்றும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியம் சீராகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீட்டுத்திட்டத்திற்கு ஆயிரத்து 19 பேர் தெரிவு


(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இந்திய வீட்டுத்திட்டத்திற்கான உதவிகளுக்காக எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள ஆயிரத்து 525 விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு ஆயிரத்து 19 பேரின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

இவர்களுடைய பெயர், விபரங்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் மக்கள் பார்வைக்காக வைக்கப்படவுள்ளன. இதில் தகுதியற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருப்பின் பிரதேச செயலருக்கும் இந்திய வீட்டுத்திட்டம் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுக்கும் தெரியப்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விண்ணப்பங்கள் யாவும் வீடு வீடாக கிராமசேவையாளர் தலைமையில் சென்ற குழுவினர் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அனுப்பியதை தொடர்ந்து அங்கு பரிசீலிக்கப்பட்டே ஆயிரத்து 19 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-134)



நன்றி: ஐலண்ட்

# யாழ்.நகரில் நேற்று இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை

## ஐ.நா.மனித உரிமை ஆணையாளருக்கும் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இடம்பெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தின்போது பல்கலைக்கழக மாணவர்களின் கைது, இராணுவத்தினரின் நில அபகரிப்பு, சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு, இராணுவ புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் தொடர்பிலும் இனப் பிரச்சினையில் வெளிநாட்டு தலையீட்டினை வலியுறுத்தியும் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவரினதும் கையொப்பங்களடங்கிய மகஜர் ஒன்று வெளியிடப்பட்டது.

இம்மகஜர் இலங்கையிலுள்ள அனைத்து வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கு கையளிக்கப்படவுள்ளதோடு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமையாளர் நாயகம் நவநீதம்பிள்ளைக்கும் கையளிக்கப்படவுள்ளது.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் அரசியல் மற்றும் குடியியல் சமூகத்தினராகிய நாம் அண்மைக் காலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ சமூகத்திற்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகள் தொடர்பில் தங்களது கவனத்தை ஈர்ப்பதற்காக இம் மகஜரை அனுப்பி வைக்கின்றோம்.

மே 2009 இற்குப் பின்னராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ சமூகத்திற்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகளின் சுருக்கப் பட்டியல் பின்வருமாறு,

1) கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அப்போதைய தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் பல்கலைக்கழக சுற்றாடலிலிருந்து 500 மீற்றருக்குட்பட்ட மக்கள் நடமாட்டமுள்ள பிரதேசத்தில் கூரிய ஆயுதங்கள் கொண்டு தாக்கப்பட்டார்.

2) கடந்த மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு தினம் தொடர்பிலான வைபவம் ஒன்றைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதனை குழப்புவதற்காக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் பரமலிங்கம் தர்சானந்த் பல்கலைக்கழக சுற்றாடலிலிருந்து 200 மீற்றருக்குட்பட்ட மக்கள் நடமாட்டமுள்ள பிரதேசத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் ஆயுதங்கள் கொண்டு தாக்கப்பட்டார்.

3) 27.11.2012 அன்று 75 இற்கும் மேற்பட்ட சீருடை அணிந்த இராணுவத்தினரும் 50 இற்கும் மேற்பட்ட சீருடை அணியாத புலனாய்வுப் பிரிவினரும் யாழ்.பல்கலைக்கழக ஆண், பெண் விடுதிகளுக்குள் புகுந்து குறிப்பாகப் பெண்கள் விடுதியில் மிகவும் மூர்க்கத்தனமாக நுழைந்து சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததோடு மாணவிகளையும் மிக மோசமான முறையில் அச்சுறுத்தியிருக்கிறார்கள்.

4) 28.11.2012 அன்று 27 ஆம் திகதி அன்று நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் அமைதியான முறையில் பல்கலைக்கழக முன்றலில் அமைதிப் போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது ஆயுதம் தரித்த பொலிஸாரும் இராணுவத்தினரும் மாணவர்களைத் தாக்கினர்.

5) 29.11.2012 மற்றும் 30.11.2012 அன்று யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் ஒரு வாரத்திற்கு முன்பதாக அமைக்கப்பட்ட இராணுவ ஒட்டுக்குழுவான சிறிரெலோவின் அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தியமை என்ற பொய்க் குற்றச்சாட்டொன்றின் பெயரில் பல்கலைக்கழக மாணவர்களான கனகசுந்தரசாமி ஜெனமேஜெயந்த், சண்முகம் சொலமன், கணேசமூர்த்தி சுதர்சன் மற்றும் பரமலிங்கம் தர்ஷானந்த் ஆகியோரை பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் கைது செய்து வவுனியாவில் இம் மகஜர் எழுதப்படும் வரை தடுத்து வைத்துள்ளனர். மேலும் பல பல்கலைக்கழக மாணவர்களையும் கடந்த காலங்களில் மாணவர் ஒன்றியங்களில் உறுப்பினர்களாக இருந்து தமது பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்து வெளியேறியுள்ள பழைய மாணவர்கள் பலரையும் கைது செய்வதற்காக பொலிஸார் தேடி வருகின்றனர்.

6) 28.11.2012 இற்குப் பின்னர் யாழ்.பல்கலைக்கழகத்தைச் சென்றடைவதற்கான பிரதான வீதியாக இராமநாதன் வீதியின் இருமருங்கிலும் வீதித் தடைகள் அமைக்கப்பட்டு 50 இற்கு மேற்பட்ட முகமூடி அணிந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் நிலை கொண்டுள்ளனர். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் உட்பட பல்கலைக்கழக சமூகத்தினர் பொலிஸாரால் எழுந்தமான முறையில் பதிவு செய்யப்பட்ட பின்னரே பல்கலைக்கழகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுகின்றனர்.

பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பல்கலைக்கழகத்திற்கு வெளியிலும் உள்ளும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தொலைபேசியிலும் நேரடியாகவும் தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர். மேற்படி பட்டியல் பிரதான சில சம்பவங்களை நிரல்படுத்துகின்றதே அன்றி தினமும் மாணவத் தலைவர்களுக்கும் பல்கலைக்கழக சமூகத்தினருக்கும் அரச இயந்திரத்தால் கொடுக்கப்படும் நெருக்கடிகளை முழுமையாகப் பட்டியற்படுத்தவில்லை. குறிப்பாகப் பல்கலைக்கழக ஆசிரிய சமூகத்திற்கெதிராகவும் பல்கலைக்கழக சுயாதீனத்திற்கு எதிராகவும் அரச இயந்திரத்தால் தொடர்ச்சியாக விடுக்கப்படும் சவால்களைப் பற்றி நாம் இங்கு நீட்சி கருதி குறிப்பிடாது தவிர்த்துள்ளோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகமானது தமிழ்த்தேசிய உரிமைப் போராட்டத்திற்கு அதன் ஆரம்ப காலப் பகுதியிலிருந்தே மிகக் காத்திரமான பங்களிப்பை நல்கி வந்திருக்கின்றது. தமிழ்த் தேசிய அரசியலை வழிப்படுத்துவதில் புலமைத்துவ பங்களிப்பையும் செயல்சார் பங்களிப்பையும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் மற்றும் மாணவ சமூகம் தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளது. இத்தகைய பங்களிப்பை இல்லாமல் செய்யும் நோக்கிலும் பல்கலைக்கழக சமூகத்தை மௌனிக்கச் செய்யும் நோக்கிலும் காலத்திற்குக் காலம் அரச இயந்திரம் முயற்சித்து வந்துள்ளது. அதன் அங்கமாகவே போருக்குப் பின்னரான சூழலில் தொடர்ச்சியாக இச் சமூகத்திற்கு எதிராக தொடுக்கப்படும் வன்முறைகள் நோக்கப்பட வேண்டும்.

போருக்குப் பின்னரான சூழலில் தொடரும் ஜனநாயக மறுப்பாக இவ் வன்முறைகளும் அச்சுறுத்தல்களும் பார்க்கப்படுவதற்கப்பால் தமிழ்த் தேசிய இருப்பைத் தொடர்ச்சியாக அழிக்கும் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக அமைகின்றன.

இறந்தவர்களை நினைவு கூருவதற்கான உரிமை, பேச்சுரிமை, ஒன்று கூடுவதற்கான உரிமை போன்ற உரிமைகள் மறுக்கப்படுவதற்கு இச் சம்பவங்கள் உதாரணமாக இருக்கின்றன என்பதோடு தமிழர்கள் தனித்துவமான அரசியலை- அவர்களது தேசம் என்ற அந்தஸ்திலான அரசியல் முன்னெடுப்பை- இல்லாமல் செய்யும் நோக்கிலேயே அரச இயந்திரம் யுத்தத்திற்கு முன்னரும் பின்னரும் செயற்பட்டு வருகின்றது என நாம் கருதுகிறோம். இதனை சர்வதேச சமூகம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலங்கை தொடர்பாக இற்றைவரை சர்வதேச சமூகம் எடுத்துள்ள நிலைப்பாடானது தாயகத்தில் வாழும் மக்களுடைய வாழ்வில் எத்தகைய காத்திரமான பங்களிப்பையும் செய்யவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். யுத்தத்தின் போது தமிழர்கள் அழிக்கப்படுவதை பார்த்திருந்த சர்வதேச சமூகம் தற்போதும் எமது தேசத்திற்கெதிரான கொடுமைகளை பார்த்து வாளாதிருப்பது சர்வதேச சமூகத்தின் மீதான நம்பகத் தன்மையை மேலும் பாதிப்பதாக இருக்கின்றது.

**தமிழ்நாட்டு இளையோர் சமூகம் மற்றும் சர்வதேசத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் இளையோர் சமூகத்தை கோருவதாவது,**

தமிழ் மாணவர்கள் உட்பட தாயகத்து மக்கள் படும் இன்னல்களை சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக தொடர்ச்சியாக முயற்சியெடுக்க வேண்டுமெனவும் தொடர் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டுமெனவும் கோருகின்றோம்.

**நாம் சர்வதேச சமூகத்தைக் கோருவதாவது,**

1) தமிழர்களது தேசிய நினைவேந்தலுக்கான உரிமையை உறுதிப்படுத்தல்.

2) தமிழ் மாணவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தலும் குறிப்பாக அவர்கள் தமது அரசியல் செயற்பாட்டுரிமையைப் பிரயோகிப்பதற்கான சூழலை ஏதுப்படுத்தலும்

3) தமிழ்ப் பிரதேசங்களில் ஜனநாயக உரிமைகளைப் பிரயோகிப்பதற்கான சூழலை ஏதுப்படுத்தல்.

4) மேலே (1), (2), (3)இல் சொல்லப்பட்டுள்ள சூழல்ல ஏற்படுத்துவதற்கு அத்தியாவசியமான முதல் நடவடிக்கையான தமிழரின் தேசத்தையும் தாயகத்தையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்தல் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4-6)

# பச்சை குத்த வேண்டாம்; நகர சபை கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பச்சை குத்தும் பணியில் ஒருவர் ஈடுபட்டு வருவதால் பொதுமக்களை பச்சை குத்துவதை தவிர்க்குமாறு சாவகச்சேரி சுகாதார பகுதியினரும் சாவகச்சேரி நகரசபையினரும் வலியுறுத்தியுள்ளனர்.

தோலில் பச்சை குத்துவதால் தோல் நோய்கள் ஏற்படுவதுடன் எயிட்ஸ் நோய் வரக்கூடிய அபாயமும் உள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். மேற்படி பச்சை குத்தும் நபர் வீடு வீடாக சென்று பச்சை குத்தும் பணியில் ஈடுபடுவதாக தமக்கு புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் இவரின் நடமாட்டத்தை அறிந்தவர்கள் உடனடியாக தமக்கு அறியத் தருமாறும் சுகாதார திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (அ-3-29)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அரசியல் கட்சியினரின் உரைகள்

## த. தே. கூட்டமைப்பு

### -மாவை சேனாதிராசா-

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் அடக்கப்பட்டாலும் ஜனநாயக ரீதியிலான போராட்டம் தொடர வேண்டும்." அது தான் பேரினவாத அரசிடம் இருந்து எமக்கான உரிமையினை நாம் பெற்றுக் கொள்வதற்கு ஒரே ஒரு வழியாகும் என யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார். யாழ். பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்றைய தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

கடந்த மாதம் 27 ஆம் திகதியன்று யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைந்த இராணுவம் அடாவடித்தனத்தில் ஈடுபட்ட தோடு மாணவிகளின் விடுதிகளுக்குள் இரவு நேரத்தில் அத்துமீறிப் புகுந்து தனது கோரமுகத்தினையும் காட்டியுள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்பு போர்வையில் யாழ். பல்கலையினுள் நுழைந்த இராணுவம் தற்போது இராணுவ ஆட்சிதான் நாட்டில் இடம்பெறுகின்றது என்பதனை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

ஜனநாயக ரீதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்த மாணவர்கள் மீது அரசு, வன்முறையினை கட்டவிழ்த்து விட்டு இளைஞர்களின் உணர்வுகளை சீண்டியுள்ளது.

இதனைவிட கடந்த 27, 28 ஆம் திகதிகளில் அங்கு சென்ற செய்தி ஆசிரியர்களையும் ஊடகவியலாளர்களையும் படையினர் காட்டுமிராண்டித்தனமாக தாக்கியுள்ள தோடு அச்சுறுத்தியும் உள்ளனர்.

மாணவர்களின் உரிமையை தடுத்து நிறுத்துவதற்கு தற்போது அரசு திட்டமிட்டுள்ளது.

எமக்காக உயிர் நீத்த எம் உறவுகளை நினைவுகூருவதற்கும் வழிபாடு செய்வதற்கும் எமக்கு உரிமை உண்டு. அதனை தடுப்பதற்கு இராணுவத்துக்கு உரிமை இல்லை. தமிழர்களின் பண்பாடு, கலாசாரங்களை அழித்து வரும் அரசு தற்போது சத்திய நிகழ்வுகளுக்கும் தடைபோட்டு அதனையும் குழப்புகின்றது. கார்த்திகை தீபத்திருநாளையும் அனுஷ்டிக்க விடாமல் தனது அராஜக அரசியலினை வெளிக்காட்டியுள்ளது. அப்பாவியான நான்கு பல்கலை. மாணவர்களை காரணம் எதுவுமின்றி கைது செய்துள்ளமையோடு அவர்களுக்கு பயங்கரவாத சாயத்தினையும் பூசியுள்ளது.

கடத்தல், கற்பழித்தல், கொலைகள், கொள்ளைகளில் ஈடுபடுவோரை பாதுகாக்கின்ற அரசு தமது உரிமைக்காக போராடியவர்களை கைது செய்வது நியாயமானதா? பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் தாக்கப்படுகின்றனர். அச்சுறுத்தப்படுகின்றனர். எங்கள் மண்ணில் நாம் சுதந்திரமாக இருந்து வாழவும் ஆளவும் இராணுவம் வெளியேற வேண்டும். மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் இராணுவத்தின் நில ஆக்கிரமிப்புக்கான போராட்டம் தொடர வேண்டும். இதேபோல் என்றும் எமது போராட்டங்களுக்கு மக்களின் ஆதரவு அவசியம் என்றார்.

## ஜனநாயக ம. முன்னணி

### -சி. பாஸ்கரா-

தென்னிலங்கையினர் தமக்காக உயிரிழந்தவர்களை நினைவுகூரமுடியுமாயின் எமக்காக உயிர் நீத்தவர்களை நாம் ஏன்? நினைவுகூர முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் பாஸ்கரா கேள்வியெழுப்பினார்.

மக்கள் முன்னணி சார்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் முடிவுற்று 3 வருடங்கள் கடந்த நிலையில் நிலஅபகரிப்பு, கடத்தல், காணாமல் போதல், இராணுவத் தாக்குதல்கள் போன்றவை குறைந்தபாடில்லை. மீள்குடியேற்றத்திற்காகவும் அடிப்படை உரிமைக்காகவும் நாம் போராட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம்.

தமக்காக உயிர் நீத்தவர்களை நினைவுகூர்ந்த மற்றும் அகிம்சை ரீதியில் போராடிய எமது மாணவர்களை இராணுவம் காட்டுமிராண்டித்தனமாக தாக்கியுள்ளது.

கடந்த 27, 28 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அச்சுறுத்தப்பட்டு தாக்கப்பட்டதோடு அங்கு சென்ற ஊடகவியலாளர்களும் ஆக்ரோசமாக படையினரால் தாக்கப்பட்டுள்ளனர். இவ் அடக்கு முறை, அரசிற்கு எதிராக மக்கள் போராட்டம் வெடிக்க வேண்டும். அதன் மூலம் தான் நாம் எமது உரிமையை வென்றெடுக்க முடியும் என்றார்.

## நவசமசமாஜக் கட்சி

### -எஸ். ஜனகன்-

தற்போது உள்ள ஆட்சியாளர்களினால் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை மட்டுமல்லாத சிங்கள மக்களினது ஜனநாயக உரிமையும் மறுக்கப்படுகின்றது என தென்னிலங்கை கட்சியான நவசமசமாஜக்கட்சி தெரிவித்துள்ளது.

யுத்தம் முடிவடைந்து 3 ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில் அரசினால் அரசியல் தீர்வு வழங்குவதாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதிலும் அது நிறைவேற்றப்படவில்லை.

அடிப்படை பிரச்சினைகள் எவையும் தீர்க்கப்படாத நிலையில் இராணுவத்தின் நில ஆக்கிரமிப்பு தொடர்கின்றது.தமிழர்களின் அனைத்தையும் பிடுங்குகின்ற அரசு தற்போது பல்கலைக்கழக மாணவர்களை வேட்டையாடத் தொடங்கியுள்ளது.தற்போது கொழும்பில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக அரசு சதித்திட்டம் தீட்டி வீண் பழி சுமத்தி யுள்ளது.

இவ் அரசின் அட்டூழிய அராஜக அரசியலுக்கு எதிராக தமிழ், சிங்கள மக்கள் அனைவரும் ஒன்றாக ஒன்று திரண்டு பேரினவாத அரசின் தளத்தை தகர்த்தெறிய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

## ம. வி. முன்னணி

### -கஜேந்திரகுமார்பொன்னம்பலம்-

பல்கலை. மாணவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டு அவர்களுடைய விடுதலைத் தாக்கத்தினை நசுக்கி அடக்க முயல்கின்றது பேரினவாத அரசு என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த 27, 28ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் எமக்கு இரு விடயத்தினை உணர்த்துகின்றன.

இராணுவத்தினரால் குறிவைக்கப்பட்டவர்கள் ஒரு இனத்தின் எதிர்கால சமுதாயத்தின் நாளைய தலைவர்கள் என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அவர்களை மட்டுப்படுத்தி, கட்டுப்படுத்தி அவர்களிடம் இருக்கக்கூடிய விடுதலை வேட்கையினை அடக்க முயல்கின்றனர்.

அடுத்து பல்கலைக்கழகம் எமது சமூகத்தின் மூளை. எமது தேசத்தின் எதிர்காலத்தை தக்கவைப்பதற்கு இது எமக்கு மிகவும் அவசியமானதாகும்.

இதனால்தான் வன்முறை அரசு தனது கோரக்கண்களை யாழ்.பல்கலைக்கழகம் மீது திருப்பியுள்ளது.

அங்கு இடம்பெறும் எழுச்சிகளை முளையிலேயே கிள்ளி எறிய முனைகின்றது.

எனினும் இதற்கெல்லாம் நாம் அஞ்சி விடாது எமது வாழ்வுரிமைக்கா தொடர்ந்தும் போராடவேண்டும் என்றார்.

## பு. ஜ. மா. லெனினிசக் கட்சி

### -செ. கதிர்காமநாதன்-

அரசின் அடக்கு முறைகளின் மூலம் மீண்டுமொரு விடுதலைப் போராட்டத்தினை உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்கின்றது என ஜனநாயக மாக்சிசலெனினிசக் கட்சியின் செல்வம் கதிர்காமநாதன் தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்து தற்போது மூன்று வருடங்களாகி விட்ட போதிலும் தற்போதும் தமிழர்கள் விடுதலைப் போராட்டத்தின் பாதையிலேயே பயணிக்கின்றனர். இதற்கு காரணம் தமிழர்களுக்குரிய உரிமையை அரசு வழங்க மறுப்பதுதான். இதனால்தான் தற்போது தமிழர்களின் போராட்டத்தின் வேட்கை தணியவில்லை.

ஜனநாயக ரீதியில் போராடிய மாணவர்களை அடித்து துன்புறுத்தினார்கள். ஆனால் அதற்கு மாணவர்கள் அஞ்சி விடவில்லை. அவ் அக்கிரமத்திற்கு எதிராக குரல் கொடுக்கவும் மாணவர்கள் துணிந்து விட்டனர். அகிம்சையினை சிதைத்து வன்முறையினை மீண்டும் தூண்டிவிட்டு அரசியல் ஆதாயம் தேடுகின்றது இலங்கை அரசாங்கம்.

எமது உரிமையினை பெறுவதற்கும் அதனைப் பெற்றுக் கொள்வதற்கும் நாம் ஜனநாயக ரீதியில் தொடர்ந்தும் அரசுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். ஒரு சமூகத்தின் மாபெரும் சக்தியாகிய இளைஞர்களினை அடக்கி விட்டால் தாம் நினைத்த எதையும் சாதிக்க முடியும் என அரசு திட்டம் தீட்டியுள்ளது. நாம் இவற்றினைக் கண்டு அஞ்சாது தொடர்ந்தும் போராட வேண்டும் என மக்களுக்கு அழைப்பு விடுத்தார். (அ-4-6)

YARL Taxi

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-70/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com

## உதைபந்தாட்ட போட்டிக்கு ஏற்பாடு

(கரவெட்டி)

வதிரி பொம்மஸ் விளையாட்டு கழகத்தின் அணி 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டி இம்மாத இறுதிக்குள் நடைபெறவுள்ளது.

மாவட்ட ரீதியாக நடைபெறவுள்ள இப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைப் பெற்று பொம்மஸ் விளையாட்டுக்கழக போட்டிக் குழுவிடம் ஒப்படைக்குமாறு போட்டிக்குழு அறிவித்துள்ளது.

(அ-3-24)

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>உயரம்: 5' 10"<br>கி.பா: 16.5, 4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை :MBBS Dr.<br>தொ. இல : B -421 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>உயரம்: 5' 2"<br>கி.பா: 44.5, 8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: MBBS Dr.<br>தொ. இல : G - 010 |
| பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 2<br>உயரம்: 5' 10"<br>கி.பா : 19.5<br>தொழில்/ தகைமை : BCS (IT) Uk Student visa)<br>தொ. இல : B - 422 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>உயரம்: 5' 2"<br>கி.பா: 37.5<br>தொழில்/ தகைமை: BSc, Maths (ஆசிரியை)<br>தொ. இல : G - 012 |
| பிறப்பு: 1986 Rc வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'6"<br>கி.பா: 40.5<br>தொழில்/ தகைமை: கலைப்பீடம் இறுதி வருட மாணவன்<br>தொ. இல : B - 423 | பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>உயரம்: 5'5"<br>கி.பா: 42.5<br>தொழில்/ தகைமை: BSc,MSc விரிவுரையாளர் மொரட்டுவ<br>தொ. இல : G - 016 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>உயரம்: 5' 4"<br>கி.பா: 20.75,2 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L<br>பிரான்ஸ் PR உண்டு<br>தொ. இல : B - 425 | பிறப்பு: 1970 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>உயரம்: 5' 3"<br>கி.பா: 4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L<br>எ.பா: வயது குறைந்த மணமகனும் ஏற்கப்படும்<br>தொ. இல : G -027 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை

## 2012 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள் மேல்மாகாணம்

# சைவநெறி

## பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. பெருங்கதையுடன் தொடர்புடைய கடவுள்
(i) விநாயகர் (ii) சிவன் (iii) முருகன் (iv) விஷ்ணு
2. சைவ சமயத்தவர் மிக மேலானதாகக் கருதுவது
(i) வழிபாடு (ii) சிவம் (iii) அறிவு (iv) அன்பு
3. "அன்பே சிவம்" எனக் கூறியவர்
(i) திருமூலர் (ii) திருவள்ளுவர் (iii) நாவுக்கரசர் (iv) சம்பந்தர்
4. "ஆருத்திரா தரிசனம்" சிறப்பாக இடம் பெறும் தலம்
(i) தில்லை (ii) பழனி (iii) மதுரை (iv) திருச்செந்தூர்
5. வாயைத் துணியால் கட்டி மௌனமாக பூசை செய்பவர்
(i) கப்புகனார் (ii) பூசகர் (iii) ஐயர் (iv) பூசாரிமார்
6. சற்புத்திரமார்க்கத்தைப் பின்பற்றியவர்
(i) நாவுக்கரசர் (ii) சேந்தனார் (iii) சம்பந்தர் (iv) நந்தனார்
7. நாவுக்கரசர் வாழ்ந்த நெறி
(i) சரியை (ii) கிரியை (iii) யோகம் (iv) ஞானம்
8. பெரிய புராணத்தை இயற்றியவர்
(i) சேந்தனார் (ii) குமரகுருபரர் (iii) சேக்கிழார் (iv) சம்பந்தர்
9. மூலமலம் எனப்படுவது
(i) ஆணவம் (ii) கன்மம் (iii) மாயை (iv) வினை
10. இராவணன் வழிபட்ட ஈழத்துத் திருத்தலம்
(i) தில்லை (ii) திருக்கோணேஸ்வரம்
(iii) பொன்னம்பல வாணேஸ்வரம் (iv) நகுலேஸ்வரம்
11. போகிப் பண்டிகையுடன் தொடர்புடைய மற்றொரு பண்டிகை
(i) தீபாவளி (ii) வருடப்பிறப்பு
(iii) ஆடிப் பிறப்பு (iv) தைப்பொங்கல்
12. ஆழ்வார்களால் பாடப்பட்ட திருத்தலங்கள்
(i) ஈச்சரங்கள்
(ii) திருமுறைத் திருத்தலங்கள்
(iii) மங்களாசாசனம் செய்யப்பட்ட திருத்தலங்கள்
(iv) ஆலயங்கள்
13. சாக்கிய வேடம் எனக் குறிப்பிடப்படுவது
(i) பௌத்த வேடம்
(ii) சமண வேடம்
(iii) சிவவேடம்
(iv) சௌரவேடம்
14. இறந்த தந்தையின் பொருட்டு அனுட்டிக்கும் விரதம்
(i) கந்தசட்டி (ii) அமாவாசை (iii) பூரணை (iv) சதுர்த்தி
15. நாம் கடைப்பிடிக்க வேண்டிய உத்தமகுணங்கள்
(i) அழுக்காறு, அவா (ii) சூதாட்டம், கள்
(iii) பிறர்மனை நயத்தல், தாமதம் (iv) அன்புடைமை, இனியவை கூறல்
16. "சதசத்து" என்று அழைக்கப்படுவது
(i) மாயை (ii) ஆன்மா (iii) பதி (iv) ஆணவம்
17. திருமுறைகளைத் தொகுப்பித்தவர்
(i) நம்பியாண்டார் நம்பி (ii) பாண்டிய மன்னன்
(iii) இராஜராஜ சோழன் (iv) நம்பியாரூரர்
18. மருணீக்கியர் எனும் பெயரைக் கொண்டவர்
(i) நாவுக்கரசர் (ii) சுந்தரர்
(iii) மெய்கண்டதேவர் (iv) சம்பந்தர்
19. தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருக்கடவூரில் அவதரித்த அம்பாள் பக்தர்
(i) தாயுமானவர் (ii) சேந்தனார் (iii) முருகன் (iv) அபிராமிப்பட்டர்
20. உழவன் தனது தொழிலை ஆரம்பிக்கும் பொழுது முதல் முதலாக மேற்கொள்ளும் சடங்கு
(i) உழவர் திருநாள் (ii) ஏர்மங்கலம்
(iii) ஆயுதபூசை (iv) முளைச் சடங்கு
21. ஆறுமுக நாவலருக்கு நாவலர் எனும் பட்டத்தை வழங்கியது
(i) திருவாவடுதுறை ஆதீனம் (ii) தஞ்சை ஆதீனம்
(iii) மதுரை ஆதீனம் (iv) நல்லை ஆதீனம்
22. ஆடிப்பிறப்பு கொண்டாடப்படுவது
(i) உத்தராயண முதல் நாள் (ii) தைப்பொங்கல் தினம்
(iii) தட்சணாயன முதல் நாள் (iv) சூரியகிரகண நாள்
23. பிதிர்க்கடன் செய்வதற்குக் கிழக்கு இலங்கையின் விசேடமான திருத்தலம்
(i) மாமாங்கம் (ii) திருக்கோயில்
(iii) வெருகல் (iv) கொக்கட்டிச் சோலை
24. "குடதிசை" எனப்படுவது
(i) வடக்கு (ii) கிழக்கு (iii) மேற்கு (iv) தெற்கு
25. தன்மாத்திரைகள் எனப்படுவது
(i) மெய், வாய், கண், மூக்கு, செவி
(ii) நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்
(iii) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
(iv) சிவம், சக்தி, நாதம், விந்து
26. யோகநெறியில் வாழ்பவர்க்குக் கிடைக்கும் முத்தி
(i) சாரூபம் (ii) சாமீபம்
(iii) சாலோகம் (iv) சாயுச்சியம்
27. திருக்கேதீச்சர ஆலயத்தின் இறைவி
(i) மாதுமை (ii) கௌரி அம்பாள்
(iii) பூலோக நாயகி (iv) வடிவாம்பிகை
28. விரத மகிமையைக் கூறும் இலக்கியம்
(i) கந்தரலங்காரம் (ii) பெரிய புராணம்
(iii) சகலகலா வல்லி மாலை (iv) சிவராத்திரி புராணம்
29. "நீரின்றி அமையாது உலகு" எனக் கூறியவர்
(i) ஔவையார் (ii) திருவள்ளுவர்
(iii) திருமூலர் (iv) நாவலர்
30. "எடுத்தவன் தருக்கை" என்ற தேவாரப் பாடலைப் பாடியவர்
(i) சுந்தரர்
(ii) மணிவாசகர்
(iii) சம்பந்தர்
(iv) அப்பர்
31. வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை அமைக்கப்பட்ட ஆண்டு
(i) 1848 (ii) 1932 (iii) 1940 (iv) 1901
32. சூரியன் உதித்த பின் ($7\frac{1}{2}$) ஏழரை நாழிகைக்குள் நடைபெறும் பூசை
(i) அதிகாலைப் பூசை (ii) காலை சந்திப் பூசை
(iii) உச்சிக் காலப் பூசை (iv) அர்த்தயாமப் பூசை
33. பயனை எதிர்பாராமல் செய்யும் கிரியை
(i) மகோற்சவம் (ii) நைமித்தியக் கிரியை
(iii) நிஷ்காமிய கிரியை (iv) காமிக கிரியை
34. திருமணச் சடங்கின் பொழுது மணமக்களுக்குக் காண்பிக்கப்படும் நட்சத்திரம்
(i) சூரியன் (ii) திருவாதிரை
(iii) அக்கினி (iv) அருந்ததி
35. "வேகாவன முடையார்" என்ற காரணப் பெயர் பெற்ற திருத்தலம்
(i) ஒட்டுசுட்டான் தான்தோன்றிஸ்வரம்
(ii) கொக்கட்டிச் சோலை தான்தோன்றிஸ்வரம்
(iii) முன்னேச்சரம்
(iv) நகுலேஸ்வரம்
36. மகாமகம் சிறப்பாகக் கொண்டாடப்படும் இடம்
(i) தஞ்சாவூர் (ii) கும்பகோணம்
(iii) பழனி (iv) திருவாரூர்
37. நல்லை கலிவெண்பா பாடியவர்
(i) இருபாலை சேனாதிராய முதலியார்
(ii) குமாரசுவாமிப் புலவர்
(iii) ஆறுமுகநாவலர்
(iv) சிவசம்புப் புலவர்
38. உயிர் உடலோடு இருக்கும்பொழுது ஆற்றப்படும் கிரியை
(i) அபரக் கிரியை (ii) பூர்வக் கிரியை
(iii) நைமித்தியக் கிரியை (iv) திருமணக் கிரியை
39. சைவசமயத்தில் சிறப்பு லட்சணம் அல்லாதது
(i) அறிவை ஆதாரமாகக் கொள்வது
(ii) அன்பை அடிப்படையாகக் கொள்வது
(iii) அதர்மத்தை அடிப்படையாகக் கொள்வது
(iv) சகிப்புத்தன்மையைக் கொள்வது
40. களவு, கொலை, காமம், கள்ளுண்ணல், பொய் சொல்லல்
(i) பஞ்ச சீலங்கள் (ii) பஞ்சாங்கங்கள்
(iii) ஐம்பொறிகள் (iv) பஞ்சமாபாதகங்கள்

## பகுதி II

**முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(1) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. இறைவன் எட்டுக் குணங்களுடையவன் என்பதால் அவனை எவ்வாறு அழைப்பீர்? மூவகைத் திருமேனிகளும் எவை?
2. சைவ நாற்பாதங்களும் யாவை?
3. கொடிமரம், கொடிச்சீலை, சீலையுடன் சேர்ந்த கயிறு முறையே எவற்றைக் குறித்து நிற்கிறது?
4. நாம் கடைப் பிடிக்க வேண்டிய சைவசமய விழுமியப் பண்புகள் மூன்று தருக?
5. விநாயக விரதங்கள் மூன்று எழுதுக.
6. தமிழ் மொழியில் எழுதப்பட்ட புராணங்கள் இரண்டு தருக. அவை யாரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறை சமாதானத்தை கொண்டு வராது

## தமிழர் விடுதலைக்கூட்டணி அறிக்கை

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மிருகத்தனமாக தாக்கப்பட்டுள்ளனர். இறந்த தங்கள் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை நினைவுகூரும் உரிமை எவராலும் எந்தவிதத்திலும் மறுக்க முடியாத நிலையில் காட்டுமிராண்டித்தனமாக நிராயுதபாணியான அவர்கள் மீது இராணுவத்தினரும் பொலிஸாரும் மிருகத்தனமாக தாக்கியதை தமிழர் விடுதலைக்கூட்டணி மிக வன்மையாக கண்டிக்கிறது. இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் வீ.ஆனந்தசங்கரி தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கண்டன ஊடக அறிக்கையில்,

இராணுவம், பொலிஸ் ஆகியோரின் இச்செயற்பாடுகள் நாட்டில் சமாதானத்தை மீண்டும் கொண்டுவராது. அதற்கு பதிலாக கடந்த கால கசப்பான சம்பவங்களாகிய பல்லாயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், பிள்ளைகளின் மரணங்கள், கோடானு கோடி பெறுமதியான அரச, தனியார் சொத்துக்கள் அழிவது, அடிப்படை மனிதவுரிமைகள் மீறுவது, மிகவும் முக்கியமாக ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவது போன்ற சம்பவங்களை மீண்டும் செயற்படுத்தவே உதவும்.

இத்தகைய விடயங்களில் தலையிடுவதும் அத்துடன் சேர்ந்த மிருகத்தனமான செயற்பாடுகளுமே இராணுவம் வடக்கு கிழக்கிலிருந்து வாபஸாக வேண்டுமென்ற கோரிக்கைகள் விடக்காரணமாக அமைகின்றன. இது போன்ற நிகழ்வுகள் இனிமேலும் நடைபெற மாட்டாது என்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை. நடந்த பல சம்பவங்களில் இதுவும் ஒன்றாகும்.

பொலிஸாரை பொறுத்தவரையில் அவர்கள் சமாதான உத்தியோகத்தர்கள் என்பதை அறிய வேண்டும் அல்லது அவர்களிடம் கூறப்பட்ட வேண்டும். அவர்கள் பொதுமக்களின் நண்பர்களேயன்றி சப்பாத்துக்கால்களால் உதைக்கின்றவர்கள் அல்ல. அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய துப்பாக்கிகளை கைவிட்டு முன்புபோல் குண்டாந்தடியை உபயோகிக்க வேண்டும். அது தலைகளை உடைப்பதற்காக அல்ல தங்கள் கடமைகளை செய்ய உதவுவதற்காக இருக்க வேண்டும்.

மேலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகிய மாணவர்கள், உயர் கல்வியினை தொடர முடியாத மாணவர்கள் ஆகியோருக்கு கைதடி தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கைதடி தொழிற்பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி ச.சபேசன் அறிவித்துள்ளார்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், காய்ச்சி இணைத்தல், மின்னியல் (தொழிற்சாலை மின்னிணைப்பு), மோட்டார் சைக்கிள் திருத்துநர், தையல், மோட்டார் வாகன பொறிவினைஞர் ஆகிய பயிற்சி நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியினைப் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது சுய விபரக் கோவையினை நாளைமறுதினத்திற்கு முன்னர் கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் (முன்னாள் சைவச்சிறுவர் இல்லம், கண்டி வீதி, கைதடி அல்லது இல.12, வீரசிங்கம் மண்டபம் (முதலாம் மாடி), யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள மாவட்ட காரியாலத்திற்கு நேரில் வருமாறும் அல்லது கடிதம் மூலமாக அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-9)

# பாடசாலை அருகே உள்ள வயற்காணிக்குள் சமூக சீர்கேடு

## நடவடிக்கை எடுக்கப்படுமா?

(புளியம்பொக்கணை)

கண்டாவளை கல்வி வலயத்திற்கு உட்பட்ட கிளி/கட்டைக்காடு அ.த.க. பாடசாலை முன்பாகவுள்ள வயற்காணியொன்று குப்பை கூழங்களால் நிரம்பி காடாக காணப்படுவதாக பாடசாலைச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

இவ் வயற்காணியில் 1/2 ஏக்கர் நிலத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஏனைய 1/2 ஏக்கர் நிலமே குப்பைகளால் நிரம்பி காடாக உள்ளது. டெங்கு பரவக்கூடிய நிலையில் காணப்படுகிறது.

அதிலும் குறிப்பாக அங்கு சமூக சீர்கேடுகளும் இடம்பெறுகிறது. இதனால் பாடசாலைச் சமூகம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

இது தொடர்பாக உரிய தரப்பினரிடம் பாடசாலை சமூகம் எடுத்துக்கூறியும் எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாடசாலைச் சமூகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)

# பல்கலை.மாணவர்களை உடன் விடுதலை செய்யுங்கள்

## தா.பாண்டியன் வலியுறுத்தல்



(கொழும்பு)

இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு,

இலங்கையிலுள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் நவம்பர் 27,28 ஆம் திகதிகளில் மிகவும் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நான்கு மாணவர்கள் பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்கள். முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு பின்னர் மனிதவுரிமை மீறல்கள் மிகவும் கூடுதலாகியுள்ளது என்பதை மனிதவுரிமை அமைப்புக்கள் அனைத்தும் மிகவும் கடுமையாக கண்டனம் தெரிவித்து வரும் இன்றைய சூழலில்தான் இந்தச் சம்பவம் நடந்தேறியுள்ளது.

இச்சம்பவத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக்குழு மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. பயங்கரவாத சட்டத்தில் மாணவர்கள் கைது செய்யப்படிருப்பதையும் மாணவர்கள் மீதான தாக்குதலையும் இலங்கையில் அமைந்துள்ள பல்கலைக்கழக மாணவர் சங்கமும் கண்டியிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

அதேநேரம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. பயங்கரவாத சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் கூறியுள்ளார். (அ-2)

# குற்றப்பிரேரணை தொடர்பில் வெளிப்படைத்தன்மை வேண்டும்

## நீதவான்கள் கோரிக்கை

குற்றப்பிரேரணை தொடர்பில் வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டுமென நீதவான்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதம நீதியரசருடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் நீதவான்கள் கூட்டாக விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகள் வெளிப்படைத்தன்மையுடனும் பக்கச்சார்பற்ற முறையிலும் நடத்தப்பட வேண்டும். குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பினர் குற்ற விசாரணைகளை மேற்கொள்கின்றமை ஏற்புடையதல்ல. இந்த நடவடிக்கை மெய்யான நீதியின் அடிப்படைப் பண்புகளை மீறும் வகையில் அமைந்துள்ளது.

நீதிமன்றத்தினதும் பிரதம நீதியரசரினதும் கௌரவத்தை சீர்குலைக்கும் வகையில் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

நீதிமன்றக் கட்டமைப்பின் மீது அவதூறு ஏற்படும் வகையிலான செய்திப் பிரசுரம் தடுக்கப்பட வேண்டும். பக்கச் சார்பற்ற முறையில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென நீதவான்கள் கோரியுள்ளனர். (அ-2)



வவுனியா சாளம்பைக்குளம் அல்அஸ்கா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் இரு மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# முறிந்துள்ள மின்கம்பங்களை அகற்றுமாறு கோரிக்கை

(புளியம்பொக்கணை)

வட்டக்கச்சியில் இருந்து கிளிநொச்சி செல்லும் பிரதான வீதியில் யுத்தத்திற்கு முன் நடப்பட்ட மின்கம்பங்கள் அகற்றப்படாது புதிய மின்கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மேற்குறித்த வீதியில் காணப்படும் பழைய மின் கம்பங்கள் வீட்டுவேலிகளிலும் வயல் வெளிகளிலும் முறிந்து தொங்கிய நிலையில் காணப்படுகிறது.

இவ்வாறு தொங்கிய நிலையில் காணப்படும் மின் கம்பங்களால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு முறிந்து தொங்கிய நிலையில் காணப்படும் மின்கம்பங்களை அகற்றி உதவுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

301

## சமரசம் செய்து வைத்தது



கந்தனும் கனகாவும் தினமும் அற்ப விடயங்களுக்கு எல்லாம் சண்டைபோட்டுக் கொள்ளும் தம்பதிகள். அக்கம் பக்கத்தவர்கள் அவர்களது சண்டைகளை விலக்கியே அலுத்துப்போய் விட்டார்கள். எனவே யாரும் அந்தக் கணவன் மனைவி சண்டை பற்றி கவலைப்படவில்லை. ஆனாலும் அவர்கள் இருவரும் சண்டை போடுவதை நிறுத்தவேயில்லை.

ஒருநாள் கனகா தன் கணவனிடம் நாளை என் அண்ணன் வீட்டில் கல்யாணம். இன்று மாலையே புறப்பட்டால் தான் முகூர்த்தத்திற்குப் போய்ச்சேரமுடியும். சீக்கிரம் தயாராகுங்கள் என்றாள்.

கந்தனோ கண்டவன் வீட்டிற்கெல்லாம் போய் ஓசிச் சாப்பாட்டிற்காக நான் துடிக்கமாட்டேன். வேண்டுமானால் நீ போய்க்கொள் என்றான். அவளோ வீட்டு மாப்பிள்ளை என்று மதித்தே உங்களைக் கூப்பிட்டிருக்கிறார்கள். நீங்கள் வராவிட்டால் உங்களுக்குத்தான் நட்டம். கந்தா உன் தந்தை உன் தங்கையின் ஊரில் படுத்த படுக்கையாக இருக்கிறார். உன்னை பார்க்க வேண்டுமாம். நீ உடனே அந்த ஊருக்கு போ என்று சொல்லி விட்டுப் போனான். உடனே அவன் உன் அண்ணன் வீட்டுக் கல்யாணத்திற்குப் போகவேண்டாம் என் தந்தையைப் பார்க்க என்



தங்கையின் ஊருக்குப் போகலாம் என்றான்.

கனகாவோ முடியாது. என் அண்ணன் வீட்டுக் கல்யாணத்திற்குத்தான் போகவேண்டும். அங்கே போனால் எல்லோரிடமும் பேசி சந்தோசமாக இருக்கலாம். உங்கள் ஊருக்குப் போனால்

## அம்புலிமாமா கதைகள்

சரிகைப்பட்டு வேட்டியும் அங்கவஸ்திரமும் இல்லாது போய்விடும். நான் போய் பட்டுப் புடைவையை வாங் கிக் கொள்கிறேன். நீங்கள் ஒன்றும் வரவேண்டாம் என்று அலட்சியமாகக் கூறிவிட்டுப் புறப்பட்டாள். அப்போது கந்தன் இரு இரு நானும் வருகிறேன் என்று சொல்லிக் கொண்டே அவளோடு சேர்ந்து சென்றனன்.

அந்த ஊருக்கு ஓர் அடர்ந்த தோப்பின் வழியாகத்தான் போயாக வேண்டும். தோப்பினுள் நுழைந்ததுமே முனியன் என்பவன் கந்தனைக் கண்டு எல்லோரும் கவலையோடு முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு இருப்பார்கள். யாரிடம் என்ன பேசமுடியும் என்றாள்?

கந்தனோ என் தங்கையின் ஊருக்குத்தான் போகவேண்டும். நான் உன் கணவன். நீ நான் சொல்கிறபடிதான் நடக்க வேண்டும் என்று கத்தினான்.

கனகாவோ முடியாது. உங்கள் பேச்சைக் கேட்கமாட்டேன். நீங்கள் நான் சொல்கிறபடிதான் நடக்க வேண்டும் என்றாள். கந்தனோ மனைவியின் பேச்சைக் கேட்டாள் உருப்படவே முடியாது என்றான். இப்படியே உரத்தகுரலில் அவர்கள் வாதம் செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது அருகே இருந்த புளியமரத்திலிருந்து ஒரு பிசாசு அவர்கள் முன் வந்தது. அப்போது கந்தன் அந்தப்பிசாசிடம் நீயே சொல். இவள் என் மனைவி. நான் சொல்வதைத் தானே இவள் கேட்கவேண்டும் என்றான்.

கனகாவோ இல்லை மனைவி சொல்வதைத்தான் கணவன் கேட்கவேண்டும். இதை இவருக்கு எடுத்துச்சொல் என்றாள். பிசாசும் ஓர் அறிவாளி சொல்வதைத்தான் மற்றவர் கேட்க வேண்டும். உங்களில் யார் அறிவாளி என்று கண்டுபிடிக்க வேண்டும். அதன்பின்பே நான் தீர்ப்புக் கூறமுடியும். இருங்கள் இதோ வருகிறேன் என்று கூறி புளிய மரத்தில் ஏறி இரண்டு பைகளை எடுத்துக்கொண்டு வந்தது.

அது அவர்களிடம் இப் பைகள் ஒவ்வொன்றிலும் ஐம்பது தங்க நாணயங்கள் உள்ளன. இவற்றை ஆளுக்கு ஒன்றெனக் கொடுக்கிறேன். மூன்று மாதங்களில் இந்தப் பணத்தை அதிகரித்துக்கொண்டு வாருங்கள். அப்போது யார் அறிவாளி என்று கூறுகிறேன். அதன் பின் தீர்ப்புக்கு இருவரும் கட்டுப்படவேண்டும். சம்மதமா என்று கேட்டது. அவர்களும் அதற்குச் சம்மதிக்கவே பிசாசு அவர்களிடம் ஆளுக்கொரு பையாகக் கொடுத்து விட்டுச் சென்றது.

அதன்பின் கனகா பிடிவாதமாகத் தன் அண்ணனின் வீட்டுக் கல்யாணத்திற்குச் சென்



றாள். கந்தனோ தன் தந்தையைக் காணத் தன் தங்கையின் ஊருக்குச் சென்றான். கல்யாண வீட்டில் கனகாவிடம் பிசாசு கொடுத்த பணப்பையை யாரோ திருடிக் கொண்டு போய்விட்டார்கள்.

கந்தனும் தன் தங்கையின் வீட்டில் பிசாசு கொடுத்த பையை ஜாக்கிரதையாக வைத்திராததால் யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

கனகாவும் கந்தனும் தம் ஊருக்குத் திரும்பி வந்தார்கள். இருவரும் தம் பைகள் திருடு போனதைக்கூறி நாம் மூன்று மாதமானதும் பிசாசிற்குப் பைகளைக் கொடுக்க வேண்டும். அவ்வளவு பணத்திற்கு எங்கே போவது? இருவரும் கடுமையாக உழைத்து பணம்சேர்த்து பிசாசிற்குக் கொடுத்துவிடுவோம் என்று தீர்மானித்தார்கள்.

இதனால் அவர்கள் தொடர்ந்து மூன்று மாதம் சண்டை போடாமல் பணம் சேர்ப்பதில் முழு மூச்சுடன் ஈடுபட்டார்கள். இதைக்கண்ட ஊரார் ஆச்சரியப்பட்டனர்.

மூன்று மாதங்கள் கழிந்தன. அவர்கள் இருவரும் தாம் சேர்த்த பணத்தைத் தம் பைகளில் போட்டு எடுத்துக் கொண்டு போய் பிசாசைச் சந்தித்தார்கள். அதனிடம் நடந்ததை அவர்கள் விபரமாகக் கூறினார்கள்.

அதைக்கேட்ட பிசாசு பலமாகச் சிரித்து உங்கள் பைகளைத் திருடியது நானே. நீங்கள் இருவரும் சண்டை போடுவதை மறந்து வேலை செய்ததில் கவனம் செலுத்தினால் பணம் சேர்க்கலாம் என்பதை உங்களுக்கு அறிவுறுத்தவே இப்படிச் செய்தேன். இனி மேலும் சண்டை போடாமல் வேலை செய்து பணம் சம்பாதித்து சுகமாக இருங்கள் எனக் கூறியது. மேலும் அவர்கள் கொண்டு வந்த பைகளை அவர்களுக்கே கொடுத்ததோடு தான் அவர்களிடமிருந்து திருடிய பணப்பைகளையும் கொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# THE MAYA CALENDAR

## மாயா நாட்காட்டி ஒரு ஆய்வு


# உலகம் அழியுமா? அழியாதா? புலப்படும் பிரம்மிப்புகள்!

-ராஜ்சிவா- 04


மாயன் சொன்னவற்றை தவறு என்று வெகு சுலபமாகத்தட்டிக்கழித்துச் செல்ல அறிவியலாளர்களுக்கே கொஞ்சம் தயக்கம் இருந்தது. மாயன்களின் சுவடுகளும் அவர்கள் விட்டுச்சென்ற சுவடிகளும் தான் இந்தத் தயக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்தக் காரணமாக அமைந்துவிட்டன. மாயன்கள் சொன்னவற்றை அறிவியலுடன் பொருத்திப் பார்க்கும்போது ஏற்பட்ட வியப்புத்தான் இந்தப் பயத்தை இன்னும் அதிகமாக்கியிருந்தது.



கலிபோர்னியா மாநிலத்தில் அதியுயர் சக்திவாய்ந்த தொலைநோக்கிகள்




நாஸ்கா லைன்ஸ்



நாஸ்கா லைன்ஸ் கேத்திர கணித வரைவுகள்




நாஸ்க்கா லைன்ஸ் - குரங்கு உருவம்



நாஸ்கா லைன்ஸ் - நாய் உருவம்



நாஸ்கா லைன்ஸ் - சிலந்தி உருவம்



நாஸ்கா லைன்ஸ் - ஹம்மிங் பறவை உருவம் (285 மீற்றர்கள்)

### மாயன்கள் வாழ்ந்த இடத்திற்கு அண்மையாக பெரு நாட்டில் நாஸ்கா கோடுகள்

நாஸ்கா கோடுகள் என்பவை பற்றி நீங்கள் அறிந்தால், இப்படியும் உலகத் தில் இருக்கிறதா என்று அச்சரியப்படு வீர்கள்.


ஏலியன்கள் (வேற்றுக்கிரக வாசிகள்) பூமிக்கு வந்திருக்கிறார்களா? இல்லையா? என்னும் இரண்டு விதமான கருத்துக்களில் ஆய்வாளர்கள் தம்மை ஈடுபடுத்திக்கொண்டாலும் அப்படி யாரும் பூமிக்கு வரவில்லை என்பதை மையமாக வைத்தே நாம் அனைவரும் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆதாரமில்லாமல் எதையும் ஒத்துக்கொள்ளாத அறிவியல் இதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. பூமிக்கு ஏலியன்கள் வரவில்லையென்றுதான் அறிவியல் சொல்லிக்கொண்டிருக்கிறதே ஒழிய ஏலியன்களே பிரபஞ்சத்தில் இல்லையென்று சொல்லவில்லை.

கலிபோர்னியா மாநிலத்தில் 42 அதியுயர் சக்திவாய்ந்த ரெலஸ் கோப்புகள் அமைக்கப்பட்டு பிரபஞ்சத்தில் எங்காவது உயிரினங்கள் இருக்கின்றனவா? அவை பேசும் குரல்கள் எமக்குக் கேட்குமா? எனத்தினம் தினம் ஆராய்ந்து கொண்டே இருக்கின்றனர். இதற்கென் பல மில்லியன் டொலர் செலவும் செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் செலவைப் பொறுப்பேற்றுக் கொண்டவர் வேறு யாருமில்லை. உங்கள் எல்லோருக்குமே தெரிந்த மைக்ரோசொப்பின் இணை இயக்குனரான பௌல் அலன்தான் அவர்.

இதனாலேயே இந்தத் திட்டம் அலன் ரெலஸ்கோப் அரேய் என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆனால், பூமிக்கு ஏலியன்கள் வந்திருக்கின்றனர் என்று அடித்துச்சொல்லும் ஆய்வாளர்கள் பெரும்பாலும் சுட்டிக் காட்டுவது நாஸ்கா லைன்ஸ் என்பதைத்தான். தமிழில் அதை நாஸ்கா கோடுகள் என்று சொல்லலாம்.

தென்னமெரிக்காவில் இருக்கும் பெரு நாட்டிலுள்ள நாஸ்கா எனும் இடத்தில் அமைந்த பெரு வெளிகளில் வரையப்பட்டிருக்கும் சித்திரங்களும் கோடுகளும் தான் நாஸ்கா கோடுகள் என்று சொல்லப்படுகின்றன. கோடுகள், சித்திரங்கள் என்றதும் ஏதோ சுவரில் எழுதப்பட்ட சித்திரம் என்று நினைத்து விடக் கூடாது. இவையெல்லாம் மிகவும் ஆச்சரியமான சித்திரங்கள். எல்லாமே மனிதர்கள் வாழாத இடமான மிகப்பெரிய நிலப் பரப்பில் வரையப்பட்ட சித்திரங்கள் 500 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் இந்தச் சித்திரங்களும் கோடுகளும் அமைந்திருக்கின்றன என்றால் நீங்களே கற்பனை பண்ணிப் பாருங்கள். இந்தப்படத்தில் பார்க்கும் கோடுகள் எல்லாமே விமானத்திலிருந்து எடுத்தாலும் தெளிவாகத் தெரியும் அளவிற்கு கீறப்பட்டிருக் கின்றன. அத்துடன் கீறப்பட்ட நேர் கோடுகள் நினைத்தே பார்க்க முடியாத அளவிற்கு நேராக, நேர்த்தியாக வரையப்பட்டிருக்கின்றன. நேராகக் கோடு வரைவதென்பது ஆச்சரியமே கிடையாது. அவற்றின் பிரமாண்டமே எம்மை ஆச்சரியப்படுத்துகின்றன. இங்கு கோடுகள் மட்டும் கீறப்பட்டிருக்கவில்லை. பல விதமான வடிவங்களும் சித்திரங்களும் வரையப்பட்டிருக்கின்றன.

இந்தச்சித்திரங்களை மூன்று விதமான வகைகளில் நாம் பிரிக்கலாம். 1. நேர்கோடுகள், 2. கேத்திர கணித முறையிலான வடிவங்கள், 3.மிருகங்கள், பறவைகள் போன்ற உருவங்கள் இதில் 800 இற்கும் அதிகமான கோடுகள், கேத்திரகணித வரைவுகளும் 100 இற்கு மேற்பட்ட மிருகங்கள் பறவைகளின் உருவங்களும் அடங்கும். இவற்றில் 50 இற்கும் மேலாக உள்ள உருவங்கள் மிக மிகப் பிரமாண்டமானவை. மிகப்பெரிய உருவங்கள் 285 மீற்றர் நீளத்திற்கும் வரையப்பட்டிருக்கிறது. அதாவது கால் கிலோ மீற்றர் நீளம். அத்துடன் நேர் கோடுகள் பல கி.மீ. நீளத்திற்கு வரையப்பட்டுள்ளன என்பதைப்பார்த்தால் ஆச்சரியத்தில் திகைத்துவிடுவீர்கள்.





எப்படி இதை வரைந்தார்கள் என்னும் கேள்வி எமக்கு எழுந்தாலும் ஏன் இதை வரைந்தார்கள் எனும் கேள்வி தான் இங்கு எல்லோருமே வியக்கும் விடயமாகிறது. நிலத்திலிருந்து பார்க்கும்போது இந்தச் சித்திரங்கள் முழுமை எவருக்குமே தெரியாது. இவற்றைப் பார்க்கவேண்டும் என்றால், வானத்தில் உயரப்பறந்தால் மட்டுமே முடியும். அப்படியென்றால் இதை வரைந்த நாஸ்காவினர் யார் பார்க்கவேண்டும் என்று இப்படி வரைந்தார்கள்?

2500 ஆண்டுகளுக்கு முன்னர் இவை வரையப்பட்டிருக்கின்றன என்பது இன்னும் யோசிக்க வைக்கிறது. இந்த நாஸ்கா உருவங்களில் குரங்கு , நாய்,சிலந்தி, பல்லி, திமிங்கலம்,மீன், ஹம்மிங் பறவை என்று தெரிந்த பல உருவங்கள் இருந்தாலும் தெரியாத உருவங்களும் பல இருக்கின்றன. இவற்றை வரைவதற்கு நிச்சயம் ஒரு அர்த்தம் இருந்தே தீரவேண்டும். இந்த ஹம்மிங் பறவை இரண்டு ஃபுட்போல் மைதானங்களின் அளவுடையது. அதாவது 285 மீற்றர்கள்.

கணினியில் அச்சுப்பதித்துத் தரும் ப்ளொட்டர் என்னும் இயந்திரம் போல் தொடங்கிய புள்ளியும் முடிந்த புள்ளியும் எதுவெனத் தெரியாமல் ஒரே தொடர்ச்சியாய் அந்தச்சித்திரங்கள் ஒரே கோட்டில் கீறப்பட்டுள்ளன. ஆச்சரியகரமாக அந்தப்படங்களின் ஏதோ ஒரு இடம் நீட்டப்பட்டு முடிவடைந்திருக்கும். குறிப்பாக அந்தக் குரங்கின் வாலைக் கவனித்தீர்களானால் அதனுடன் இன்னுமொரு தொடர்ச்சியிருக்கும். அவையெல்லாம் என்ன காரணங்களினால் அப்படி வரையப்பட்டிருக்கின்றன என்றே புரியவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து நேற்று யாழ்.நகரில் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பதிவுகள்**

படங்கள் : எஸ், ஆர்.கரன், உ.சாளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி முனையில் திருட்டு முயற்சி!

## முள்ளியவளையில் சம்பவம்

(முள்ளியவளை)

பூட்டியிருந்த வீட்டுக்குள் ஜன்னலை உடைத்து நுழைந்த கொள்ளையர்கள் துப்பாக்கி முனையில் வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தியதோடு தடுக்க முற்பட்ட நபரையும் கடுமையாக தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் முள்ளியவளை மாமூலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது துப்பாக்கியுடன் நுழைந்த மூன்று பேர் கொண்ட கொள்ளையர்கள் அங்கிருந்த வயோதிப தம்பதியினரை கட்டி வைத்து மிரட்டியுள்ளனர்.

சம்பவத்தை அறிந்த அயலவர்கள் அங்கு சென்றபோது அக்கும்பல் அவர்களை தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

. கொள்ளைக் கும்பலின் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்த நிலையில் அப்பகுதியை சேர்ந்த மோகன் என்பவர் மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்திருட்டு முயற்சி தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் வீட்டின் உரிமையாளரான அழகர் என்பவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விரட்டப்பட்ட கொள்ளை கும்பல் விட்டுச் சென்ற துப்பாக்கி, கூரிய ஆயுதங்கள், பயணித்த ஆட்டோ என்பன மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸார் இருவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் அண்மையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீள்குடியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-6)

# குற்றவாளிகளை பாதுகாப்பதே மஹிந்த அரசாங்கத்தின் வேலை

## ஐ.தே.க. பேச்சாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

எப்போதும் இல்லாதவாறு கடந்த 11 மாதங்களில் இலங்கையில் 300 மனிதக் கொலைகள் இடம் பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தகவல் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் குற்றவாளிகளை பாதுகாக்கும் அரசாங்கமாகவே செயற்பட்டு வருகிறது.

இதன் காரணமாகவே நாட்டில் குற்றங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் நடவடிக்கைகளில் அரசியல் செல்வாக்கு பாரியளவில் பயன்படுத்தப்படுகிறது. திறமையான பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதற்கிடையில் நாட்டில் 2011 ஆம் ஆண்டில் மாத்திரம் புகையிரதம் தொடர்பான விபத்துக்களில் 2 ஆயிரத்து 697 பேர் பலியானதாக கருணாதிலக்க சுட்டிக்காட்டினார். (அ-2)

# பாராளுமன்ற வீதியில் உண்ணாவிரதம் இருப்பேன்

## கோட்டே மேயர் கூளுரை

(கொழும்பு)

பாராளுமன்ற வீதியில் 10 ஆயிரம் பேருடன் அமர்ந்து உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அந்த உண்ணாவிரத போராட்டத்தில் தானே முதலாவது ஆளாக அமரவுள்ளதாகவும் கோட்டே மேஜர் ஜனக்க ரணவக்க தெரிவித்தார்.

கோட்டை ஹேவாவிதாரண வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோட்டே நகரசபை பிரதேசத்தில் தற்போதும் போதைப்பொருள் வியாபாரம் நடைபெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இப்போதைப்பொருள் விற்பனை நிலையங்கள் குறித்து எந்தவொரு நடவடிக்கையையும் பொலிஸார் எடுக்கவில்லை எனவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே தாம் உண்ணாவிரத போராட்டத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை ஈடுபடவுள்ளதாகவும் கோட்டே மேஜர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பாகிஸ்தான் கைதிகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும்

## பாக்.தூதுவருக்கு ஹக்கீம் உறுதிமொழி

(கொழும்பு)

இலங்கைச் சிறைகளில் உள்ள பாகிஸ்தான் கைதிகள் விவகாரத்தில் உரிய கவனம் செலுத்தப்படுமென்றும் அவர்களுக்கான தண்டனை மற்றும் தண்டனை அனுபவிக்கும் காலம் என்பன தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாட்டை களைவதற்கு ஏதுவாக இலங்கை-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே உடன்பாடு காணப்படுவது மிகவும் அவசியமாக இருப்பதாகவும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தமது பதவிக்காலத்தின் முடிவில் இங்கிருந்து நாடு திரும்பும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் திருமதி சீமா பலோச் அமைச்சர் ஹக்கீமிடமிருந்து பிரியாவிடை பெறுவதற்காக நேற்று முன்தினம் முற்பகல் நீதியமைச்சில் அவரைச் சந்தித்தார்.

இதன்போது இங்கு சிறைவாசம் அனுபவிக்கும் பாகிஸ்தான் கைதிகள் தொடர்பில் எழுப்பிய கேள்வியொன்றிக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாகிஸ்தானின் சட்டங்களுக்கும் இலங்கையின் சட்டங்களுக்குமிடையே வேறுபாடுகள் உள்ளதால் குற்றங்கள், அவற்றிற்கான தண்டனைகள், தண்டனை அனுபவிக்கும் காலம் என்பன தொடர்பில் வித்தியாசங்கள் இருப்பதாக சுட்டிக்காட்டிய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பாகிஸ்தானைச் சேர்ந்த கைதியொருவர் நாடு திரும்பும் போது நிகழக்கூடியவற்றையும் விபரித்தார்.

மேலும் இலங்கைச் சிறைகளில் 20 பாகிஸ்தான் கைதிகள் உள்ளதாகவும் அவர்கள் போதைப் பொருள் மற்றும் வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் கைதாகி தண்டனை விதிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிவித்தார்.

இதன்போது முன்னர் குற்றச் செயல்கள் தொடர்பான கைதிகள் விவகாரம் பற்றி இரு நாடுகளுக்கும் இடையே ஓர் உடன்படிக்கை இருந்ததாகவும் இன்றைய சூழ்நிலையில் காலமாற்றத்திற்கு ஏற்ப அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளதெனவும்,

தாம் விரைவில் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய தண்டனைக் கொள்கைச் சட்டத்தின் கீழ் குற்றச்செயல்கள், அவற்றுக்கான தண்டனைகள் என்பன பற்றி திட்டவட்டமாக வரையறுக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

அத்துடன் ஏறத்தாழ ஒரேவிதமான குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட ஈரான், இந்தியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



நீர்வேலி வடக்கை சேர்ந்த வைத்தியர் கதிர்காமு தர்மலிங்கம் யாழ்.மாவட்ட சமாதான நீதவா னாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, கொழும்பு மருத்துவக் கல்லூரியின் பழைய மாணவனும் பதிவுபெற்ற வைத்திய அதிகாரியுமாவார்.

நீர்வேலி முழக்கப்பிட்டி நாச்சிமார் கோவில் பரிபாலனசபையின் செயலாளராக பணிபுரியும் இவர் கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (அ)

# மாத்தளையில் இதுவரையில் 24 மனித எலும்புக்கூடுகள் மீட்பு

மாத்தளை வைத்தியசாலை பகுதியில் குழியொன்றில் இருந்து இதுவரை 24 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கட்டடம் ஒன்றை அமைக்கவென மாத்தளை வைத்திய சாலைக்கு முன்னால் கடந்த 23ஆம் திகதி நிலத்தை அகழ்ந்த போது எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மாத்தளை வைத்திய அதிகாரி, நீதவான் ஆகியோர் நடத்திய விசாரணையில் அவை மனித எலும்புக்கூடுகள் என தெரியவந்தது. எலும்புக்கூடுகள் குறித்து மாத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி குறிப்பிட்டார். (அ-2)

# அம்பாறையில் மீண்டும் நிலஅதிர்வு

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் மீண்டும் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. இந்த நில அதிர்வு நேற்று முன்தினம் இரவு அம்பாறை மாவட்டத்தில் மூன்று பகுதிகளில் உணரப்பட்டுள்ளது. கடந்த வாரம் அம்பாறை மாவட்டத்தின் வடிகானல, ககல்கந்த, பல்லன்ஓயா, தேவாலஹிந்த, கிவுள்ளேகம ஆகிய பிரதேசங்களிலேயே உணரப்பட்டுள்ளது.

இந் நில அதிர்வு குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்று அம்பாறை மாவட்டத்திற்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)




யாழ்ப்பாணம் அன்பொளி கல்வியகத்தில் இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான கௌரவிப்பு விழாவும் கலைவிழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ்மொழிப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடம் பெற்ற பா.அபிராம் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் இப்பரீட்சையில் 185 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு விருந்தினர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி வேலுச்சாமி கிளப்பிய புயல்!

நாட்டையே உலுக்கியது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொடூர மரணம். இந்தக் கொலைக்குக் காரணம் விடுதலைப் புலிகள்தான் என்று இன்றுவரை சொல்லப் படுகிறது. ஆனால், இந்தக் கொலைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றும், கொலை நடந்த காலகட்டத்தில் இந்தியாவின் சட்ட அமைச்சராக இருந்த சுப்பிரமணியசாமிதான் காரணம் என்றும், தொடர்ந்து எல்லா மேடைகளிலும் முழங்கி வருகிறார் சு.சாமியோடு இருந்த திருச்சி வேலுச்சாமி. தற்போது **ராஜீவ்காந்தி படுகொலை... தூக்குக் கயிற்றில் நிஜம்** என்ற நூலை எழுதி அதிர்ச்சியூட்டும் உண்மைகளை அம்பலப்படுத்தியிருக்கிறார். இந்த நூலின் வெளியீட்டுவிழா கடந்த 23-11-2012 வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிக்கு சென்னை தியாகராய நகரிலுள்ள சர்.பிட்டி தியாகராய கலையரங்கத்தில் அரங்கேறியது. ஆபிரஹாம் செல்வக்குமார் வரவேற்க... புலவர் புலமைப்பித்தன் தலைமையுரையாற்ற... பழ.நெடுமாறன் நூலை வெளியிட, 90 வயதான ஈழத்துக்காந்தி டேவிட் ஜயா மற்றும் பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள் பெற்றுக் கொண்டார்கள். வாழ்த்துரை வழங்க அவர் பெயரைப் போட்டால் நான் வரமாட்டேன் என்ற இருவருக்குமான போட்டியில் எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லாவும், எக்ஸ். எம்.எம்.ஏ. ஹெச். ராஜாவும் ஆப்செண்ட். ஓவியர் புகழேந்தி, இயக்குனர் புகழேந்தி, டி.எஸ்.எஸ். மணி, வழக்கறிஞர் புகழேந்தி ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். நிகழ்ச்சியை தனது கணீர் குரலால் தொகுத்து வழங்கினார் வெங்கட்பிரகாஷ்.




தலைமையுரையாற்றிய புலவர் புலமைப் பித்தனோ, **தூக்குக் கயிற்றில் நிஜம்** என்ற நூலை எழுதிய திருச்சி வேலுச்சாமியை நல்ல அரசியல்வாதியாகவும் பார்க்கிறேன்; நண்பனாகவும் பார்க்கிறேன். ஒரு உயிருக்குப் பல இலட்சம் தமிழர்களைக் கொன்று தண்டித்திருக்கிறார்கள். சந்திரா சாமியும் சுப்பிரமணியசாமியும் செய்த சதியில் இப்படி கொல்லப்பட்ட அப்பாவி மக்களை கொன்றவர்களுக்கு என்ன தண்டனை? இப்போது கூட கொத்துக்குண்டுகளின் சப்தம்தான் இல்லையே தவிர மன்மோகன்சிங்கின் மௌன யுத்தம் இன்னமும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. இந்தப் புத்தகம் பற்றி ஒரு திறனாய்வு புத்தகத்தை எழுதுவேன் என்று எல்லோரையும் முறுக்கேற வைத்தார் புலமைப்பித்தன்.



நூலை வெளியிட்டுவிட்டு பேசிய பழ.நெடுமாறன், ராஜீவ் கொலையில் உண்மையான குற்றவாளிகள் மறைக்கப்பட்டிருக்கிறார்கள். கொலை விசாரணை நாடகம் போல் நடத்தப் பட்டது. சி.பி.ஐ. அதிகாரி கார்த்திகேயனின் நாடகம். கொலைக்குற்றவாளிகளாகக் கைது செய்யப்பட்டவர்கள் 26 பேரில் 13 பேர் ஈழத்தமிழர்கள். மீதி 13 பேர் தமிழக தமிழர்கள். இப்படி சரிசமமாக சதித்திட்டம் தீட்டுவார்களா? அதுவும் உலக வரலாற்றிலேயே ஒரு கொலைக்கு 26 பேருக்கு தூக்கித் தண்டனை கொடுத்தது இதுதான் முதல்முறை. நல்லவேளை உச்சநீதிமன்றத்துக்குப் போயிருக்காவிட்டால் அந்த 26 பேருக்கும் தூக்கு கொடுக்கப்பட்டு புதைத்த இடத்தில் புல் முளைத்திருக்கும்.

மகாத்மாகாந்தி, இந்திரா காந்தி கொலை விசாரணையெல்லாம் பகிரங்கமாக நடந்தது. பக்கம் பக்கமாய் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. ஆனால், ராஜீவ்காந்தி கொலை வழக்கு மட்டும் இரகசியமாக நடந்தது. எந்த பத்திரிகையாளர்களும் அனுமதிக்கப்படவில்லை. 26 பேருக்காக வாதாடும் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்துக்குள் செல்லும்போது சோதிக்கப்பட்டே அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

ஹிட்லர் ஆட்சியில்கூட அப்படி நடந்ததில்லை. தடா கைதியாக என்னை விசாரித்த போது, இளைஞர்களைக் கூட்டி குண்டு வைக்கச் சொல்லி திட்டம் தீட்டினார் என்று அரசு வழக்கறிஞர் குற்றம் சாட்டினார். ஆனால், அதற்கு முந்தைய நாளே வேறொரு காரணத்துக்காக கைது செய்யப்பட்டு சென்னை சிறையில் இருந்தேன். இதை அறிந்த நீதிபதி சித்திக் என்னை தடா வழக்கிலிருந்து ஐந்தே நாட்களிலேயே விடுவித்தார். இப்படி யாருக்கும் நடந்தில்லை. இதை கவனித்த சி.பி.ஐ. அதிகாரி கார்த்திகேயன் நீதிபதி சித்திக்குக்கு உயர்பதவி கொடுப்பதுபோல அவரை மாற்றி நவநீத கிருஷ்ணனை நீதிபதியாக நியமிக்க ஏற்பாடு செய்தார். அவர் 26 பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்தார். அந்தத் தீர்ப்பை எழுதியது சி.பி.ஐ. அதிகாரி கார்த்திகேயன். அதை வாசித்தார் நீதிபதி அவ்வளவுதான். இது ஒரு நீதிமன்ற படுகொலை என்று உரக்கக் கூறியது மிகப் பிரபலமான மனித உரிமை அமைப்பான **ஆம்னஸ்டி இண்டர்நேஷனல் ஆர்கனைசேஸன்.** இது தமிழர்களுக்கு விடப்பட்ட சவால். ஈழம், ஈழம் என்று யார் பேசினாலும் இதுதான் கதி என்ற சவால். சுப்பிரணமணிய சாமிதான் சதிக்காரரர் என்பதை அம்பலப் படுத்தியுள்ள வேலுச்சாமியின் உயிருக்கே ஆபத்து வரலாம் என்றார்.


நடிகர் ராஜ்கிரணோ, தீவிரவாதத்துக்கும் உரிமைவாதத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் இருக்கிறார்கள். விடுதலைப்புலிகள் மண்ணுக்கான உரிமைக்காகப் போராடியவர்கள் என்பதை உணர்த்தும் இந்த நூலை மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும். அதுமட்டுமல்ல... ராஜீவ் கொலை வழக்கு சதியில் இருப்பது யார் என்ற உண்மையை இந்தியர்களுக்குத் தெரிவிக்க இந்த நூலை இந்தியிலும், உலகத்துக்கே அறிவிக்க ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்க வேண்டும் என்றார் உணர்ச்சி பொங்க.

வழக்கறிஞர் புகழேந்தி, ஒரு கொலையை நான்தான் செய்தேன் என்று யாராவது எழுதிக் கொடுத்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாலும், உண்மையான குற்றவாளிதானா என்று அவரை விசாரணை செய்த பிறகுதான் கைது செய்வார்கள். ஆனால், தடா என்பது அப்படியல்ல. நான் இல்லை என்று மறுத்தாலும், கையெழுத்துப்போட மறுத்தாலும்கூட பொலிஸ் சொன்னால் அந்த நபரை குற்றவாளியாக்க முடியும். இப்படி பலரையும் துன்புறுத்தி கையெழுத்து வாங்கித்தான் தடாவில் கைது செய்தார்கள். சி.பி.ஐ.யைப் பொறுத்தவரை ஆட்சியாளர்களின் கைக்கூலி என்றுதான் சொல்வேன் என்று குற்றஞ்சாட்டினார்.

ஓவியர் புகழேந்தியோ, உலகம் முழுக்க விடுதலைப்புலிகளின் இயக்கத்தை தடை செய்ய இந்தக் கொலையைத்தான் காரணம் காட்டுகிறார்கள். ஆனால், ராஜீவை கொன்றது விடுதலைப்புலிகள் அல்ல என்று உணர்த்துகிறது இந்த நூல். யாரையெல்லாம் தலைவர் என்று வாக்களித்திருக்கிறோமோ அவர்களை சமூக விரோதிகளாக சித்தரிக்கிறது. துப்பறியும் நாவலைப் போல் விறுவிறுப்பாக இருக்கிறது. மறைக்கப்பட்ட வரலாறுகளையும் திரிக்கப்பட்ட உண்மைகளையும் உரத்து சொல்கிறது. என்றார்.

இயக்குனர் புகழேந்தி, என்றைக்காவது அப்பாவி சிங்களவர்களை விடுதலைப்புலிகள் தாக்கிய சம்பவம் நடந்திருக்கிறதா? சிங்கள இராணுவம்தான் இலக்கு. இந்தக் கொலையை பிரபாகரன் என்ற மேன்மையான உண்மையான உறுதியான போராளி செய்திருக்க வாய்ப்பே இல்லை. இதைத்தான் வேலுச் சாமி விரிவாக சொல்லியிருக்கிறார் என்கிறார்.

பத்திரிகையாளர் டி.எஸ்.எஸ். மணி, 21 வருஷம் கழிச்சு **லேட்டா** வந்தாலும், **லேட்டஸ்ட்டா** வந்திருக்கு. செய்வதையெல்லாம் செய்துவிட்டு தன்னை காப்பாத்திக்க அ.தி. மு.க.வை ஒரு பக்கமும் தி.மு.க.வை ஒரு பக்கமும் எப்படி அடித்திருக்கிறார் சுப்பிரமணிய சாமி என்பதையும் இந்தப் புத்தகம் விளக்குகிறது. அது மட்டுமல்ல. இந்தப் புத்தகம் ராஜீவ் கொலையில் ஒரு சுற்றுச் சூழல் சாட்சி என்றார்.



8:34க்கு ஏற்புரை வழங்க மைக் பிடித்த நூலாசிரியர் திருச்சி வேலுச்சாமியோ, இது ஒரு வரலாற்று ஆவணம். எனது குடும்பமே காங்கிரஸ் குடும்பம்தான். நான் உண்மையான காங்கிரஸ்காரன் என்று சொல்வதில் பெருமிதம் அடைகிறேன். அடிமைப்படுத்துகிறவர்களை எதிர்ப்பதுதான் காங்கிரஸின் கொள்கை. அப்படியென்றால் காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளைத்தான் பிரபாகரனும் செயற்படுத்துகிறார். இந்தக் கொலையைப் பற்றிய உண்மைகளை இன்றுவரை அம்பலப்படுத்தும் என்னை ஏன் இதுவரை விசாரிக்கவில்லை? இது ஒரு மோசடி இல்லையா? உங்களுக்கு துப்பு இல்லை என்றால் சுப்பிரமணிய சாமியையும் சந்திராசாமியையும் ஐந்து நிமிடம் என்னிடம் அனுப்புங்கள். நான் உண்மையைக் கக்க வைக்கிறேன்.

**உலகம் உருண்டை என்று சொன்னவனை அடித்தே கொன்றார்கள். ஆனால், இப்போது உலகம் உருண்டை என்று ஏற்றுக் கொண்டுவிட்டோம்.** அதுபோல் இல்லை; இல்லை என்று சொல்லும் ஆயிரக் கணக்கான பேரில் நானும் ஒருவனாக இருக்க விரும்பவில்லை. உலகம் உருண்டை என்று சொல்லி செத்துப்போனானே அவனாக இருக்க விரும்புகிறேன். மு.வ.ஜப்பானுக்கு சென்றபோது கரும்பைக் கடித்துத் துப்பிக் கொண்டே போனாராம். ஜப்பான் சிறுவன் துப்பப்பட்ட அந்தக் கரும்புச் சக்கைகளை எடுத்து குழந்தைகள் விளையாடும் அழகான கிலுகிலுப்பை ஒன்றை உருவாக்கினானாம். அப்படித்தான் இந்த நூலை தொகுத்திருக்கிறார் தம்பி ஏகலைவன் என்று மெய் சிலிர்த்தார்.

இறுதியாக வாழ்த்துரை வழங்கிய சீமானோ, ராஜீவ்காந்தி இறந்த தினத்தை சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு தினமாக அறிவித்திருக்கிறது அரசு. தேசபிதா காந்தியையோ, இந்திரா காந்தியையோ கொலைசெய்த நாளில் ஏன் இதைப்போல் செய்யவில்லை? முஸ்லிம்களை தீவிரவாதிகள் என்று தவறாக சித்தரிப்பதுபோல, தமிழர்களை பயங்கரவாதிகளாகவும் தீவிரவாதிகளாகவும் சித்தரிக்கத்தான் இப்படிச் செய்கிறார்கள்; உலகம் முழுக்க தடைசெய்திருக்கிறார்கள். அந்தத்தடையை உடைக்கும் பேராயுதம்தான் இந்தப் புத்தகம்.

விடுதலைப்புலிகள்தான் அந்த மாபெரும் கொலையை செய்துவிட்டார்கள் என்ற தாழ்வு மனப்பான்மையிலிருந்து வெளிவரவேண்டும். இந்தப் புத்தகம் இன்னும் பத்து ஆண்டுகளுக்கு முன்பே வந்திருக்கக் கூடாதா?

எப்போது பார்த்தாலும் விடுதலைப்புலிகள் என்றாலே டெரரிஸ்ட் என்கிறார் சுப்பிரமணியசாமி. உலக டெரரிஸ்ட் நீயே சுத்திக்கிட்டிருக்க, **ஒன் மேன் ஆர்மி** என்று சொல்வார்கள். ராஜீவ் கொலையில் உள்ள மர்மங்களைத் தொடர்ந்து அம்பலப்படுத்திவரும் திருச்சி வேலுச்சாமிதான் அந்த **ஒன்மேன் ஆர்மி.**

கிறிஸ்தவர்கள் வீட்டில் இருக்கும் பைபிளைப் பால, முஸ்லீம்கள் வீட்டில் இருக்கும் குர்ஆனைப்போல, இந்துக்கள் வைத் திருக்கும் பகவத்கீதைபோல இந்த நூல் அனைத்து தமிழர்களின் வீட்டிலும் இருக்க வேண்டும் என்றார் ஆக்ரோஷமாக.

இந்தப் புயலை எப்படி எதிர்கொள்ளப் போகிறார் சுப்பிரமணியசாமி?

-நக்கீரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணிகள் சங்கத்தின் மனு விசாரணைக்கு வந்தது

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு உயர்நீதிமன்றம் ஏற்றுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர் நிமல் காமினி அமரதுங்க தலைமையிலான நீதியரசர்கள் குழு முன்னிலையில் குறித்த மனு நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்ததுடன் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி குற்றப்பிரேரணைக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்வதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு உரிமை உள்ளது என நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

பிரதிவாதிகள் தங்களுடைய ஆட்சேபனைகளை நான்கு வாரங்களுக்குள்ளும் மனுக்கள் மீதான பதில் சத்தியக்கடதாசிகளை மனுதாரர் இரண்டு வாரத்திற்குள்ளும் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து மனு மீதான பூர்வாங்க விசாரணை 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்த நீதிமன்றம் வழக்கையும் அன்றைய தினத்திற்கே ஒத்திவைத்தது. (அ-2)

# வடபிராந்திய போ.வ.சபையினர் அமைச்சர் டக்ளஸை சந்தித்தனர்

## தேவைகள் குறித்து எடுத்துரைப்பு

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை பேருந்துசாலையினது சேவைகளையும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கை வங்கியூடாக கடன் அடிப்படையில் எரிபொருளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு வடபிராந்திய போக்குவரத்து சபையின் துறைசார்ந்தவர்கள் வருகை தந்து தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன்போது பருத்தித்துறை பேருந்துசாலை தமது சேவையை செய்வதிலுள்ள இடர்பாடுகள், பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

குறிப்பாக எரிபொருளை கடன் அடிப்படையில் பெற்றுத் தரும் பட்சத்தில் அது தமது பேருந்து சாலையினது வளர்ச்சிக்கும் சிறப்பான சேவைக்கும் பயனுள்ளதாக அமையுமென தெரிவித்ததை அடுத்து அவர்களுக்கு அவ்வசதியைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதிமொழி வழங்கினார்.

இதனிடையே ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், பிராந்திய செயலாற்றல் முகாமையாளர் கேதீசன், நிதி முகாமையாளர் உள்ளிட்டோர் உடனிருந்தனர். (அ-9)

# இலங்கையில் எந்தவித ஆபத்துக்களும் இல்லை

## ஜெனீவா பிரதிநிதி ரவிநாத் தெரிவிப்பு

புகலிடக்கோரிக்கையாளர்கள் நாடு திரும்ப முடியும் என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான ஜெனீவா பிரதிநிதி ரவிநாத் ஆரிய சிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எந்தவிதமான ஆபத்துக்களும் கிடையாது. சர்வதேச குடிப்பெயர்வாளர் பேரவையின் 101 ஆம் அமர்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக் கொண்டவர்கள் நாடு திரும்ப வேண்டியது அவசியமானது. இதேவேளை, சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் பாரியளவில் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

அண்மைக்காலமாக வெளிநாடுகளில் புகலிடம் கோரும் இலங்கையர்கள் பொருளாதார நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவர்கள் என்பதை நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளின் ஆபத்துக்கள் குறித்து உலக நாடுகள் போதியளவு விளக்கமளிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கைக்குண்டுடன் ஒருவர் கைது

கொனலகொட பிரதேசத்தில் வெளிநாட்டு தயாரிப்பு என இனங்காணப்பட்ட கைக்குண்டு ஒன்றுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் கடந்த 2 ஆம் திகதி மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ள அதே வேளை பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-2)




★ 1082-பார்சிலோனோ மன்னன் இரண்டாம் ரமோன் பெரெங்கெர் கொல்லப்பட்டான்.

★ 1360-பிரெஞ்சு நாணயம் பிராங்க் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1492- கொலம்பஸ் ஹிஸ்பனியோலா தீவை அடைந்தார். இத்தீவை அடைந்த முதலாவது ஐரோப்பியர் இவரே.

★ 1497-போர்த்துக்கல்லின் மன்னன் முதலாம் மனுவேல் யூதர்கள் அனைவரும் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறும் அல்லது நாட்டை விட்டு வெளியேறுமாறும் பணித்தான்.

★ 1746-ஸ்பானிய ஆட்சிக்கெதிராக ஜெனோவாவில் கிளர்ச்சி ஆரம்பமானது.

★ 1848-கலிபோர்னியாவில் பெருமளவு தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் போக் அறிவித்தார்.

★ 1893-மின்சாரத்தில் இயங்கும் தானுந்து அறிமுகமானது.

★ 1896-சென்னை கன்னிமாரா பொது நூலகம் ஆளுநர் சர் ஆர்தர் ஹாவ்லக் என்பவரால் பொதுமக்களுக்காகத் திறந்து விடப்பட்டது.

★ 1933- யூட்டா 36 ஆவது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்தது.

★ 1934-இத்தாலியப் படைகள் அபிசீனியாவின் வால் வால் நகரத்தைத் தாக்கினர்.

★ 1936-சோவியத் ஒன்றியம் தனது புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியது. கிர்கிஸ்தான் சோவியத் ஒன்றியத்திற்குள் முழுமையான குடியரசாக அறிவிக்கப்பட்டது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: பின்லாந்து, ஹங்கேரி, ருமேனியா நாடுகளின் மீது பிரித்தானியா போரை அறிவித்தது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: கியூயோர்கி சூக்கொவ் தலைமையில் சோவியத் படைகள் ஜேர்மனிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக மொஸ்கோவில் பெரும் தாக்குதலைத் தொடுத்தனர்.

★ 1957-இந்தோனேசியாவில் இருந்து அனைத்து 3 இலட்சத்து 26 ஆயிரம் டச்சு மக்களும் வெளியேற்றப்பட்டனர்.

★ 1958-STD தொலைபேசி இணைப்பு சேவை ஐக்கிய இராச்சியத்தில் இரண்டாம் எலிசபெத் மகாராணியால் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1969-அமெரிக்க படைத்துறை உயர் ஆய்வு நிறுவனத்தால் இணையம் நிறைவேறியது.

★ 1969- மை லாய் படுகொலைகள் தொடர்பான தகவல்களை லைஃப் இதழ் வெளியிட்டது.

★ 1978-சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானுடன் நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

★ 1983-ஆர்ஜென்டீனாவில் இராணுவ ஆட்சி கலைக்கப்பட்டது.

★ 2003-இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் குளிர்திரவ ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்திருப்பதாக அறிவித்தது.

★ 2006-பிஜியில் இராணுவப் புரட்சி மூலம் அதன் இராணுவத் தளபதி வொரெக் பைனிமரமா அரசைக் கைப்பற்றினார்.

★ 2006-இந்திய நடுவண் அரசில் நிலக்கரித் துறை அமைச்சராக இருந்த சிபு சோரன் 1994 இல் அவரது உதவியாளரைக் கொலை செய்த குற்றத்துக்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார்.

### பிறப்புக்கள்

★ 1782-மார்ட்டின் வான் பியூரன், ஐக்கிய அமெரிக்காவின் 8 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1848)

★ 1901- வால்ட் டிஸ்மி உலகப் புகழ்பெற்ற ஓவியர் (இ.1966)

★ 1901-வேர்னர் ஐசன்பேர்க், ஜேர்மனிய இயற்பியலாளரும், நோபல் பரிசு பெற்றவரும் (இ.1976)

★ 1966- தயாநிதி மாறன், இந்தியாவின் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்புத் துறையின் நடுவண் அமைச்சர்

★ 1985- ஜாஷ் ஸ்மித், அமெரிக்கக் கூடைப்பந்தாட்டக்காரர்

### இறப்புக்கள்

★ 1791-மோட்ஸார்ட், ஐரோப்பிய செவ்வியல் இசையமைப்பாளர் (பி.1756)

★ 1879-ஆறுமுகநாவலர், ஈழத்தின் சைவ ஆன்மீகவாதி, தமிழ் உரை நடையின் தந்தை (பி.1822)

★ 1926- குளோட் மொனே, பிரெஞ்சு ஓவியர் (பி.1840)

★ 1950- ஸ்ரீ அரவிந்தர், இந்திய ஆன்மீகவாதி (பி.1872)

★ 1954- கல்கி கிருஷ்ணமூர்த்தி, தமிழ் எழுத்தாளர் (பி.1899)

#### ஆறுமுகநாவலர்



ஆறுமுகநாவலர் தமிழ் உரைநடை செவ்விய முறையில் வளர்வதற்கு உறுதுணையாய் நின்றவர். தமிழ், சைவம் இரண்டும் வாழப் பணிபுரிந்தவர். திருக்குறள் பரிமேலழகருரை, நன்னூற் கடிகை போன்ற இலக்கிய, இலக்கண நூல்களையும் திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் போன்ற நூல்களையும் பிழையின்றிப் பதித்தவர்.

**தோற்றம்**

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், நல்லூர் என்னும் ஊரில் 1822 டிசெம்பர் 18 ஆம் திகதி கந்தப்பிள்ளை-சிவகாமி அம்மையார் தம்பதியருக்கு இறுதி மகவாகப் பிறந்தார். நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும். தகப்பனார் ப. கந்தப்பிள்ளை, பேரன் பரமானந்தர், பூட்டன் இலங்கைக்காவல முதலியார் ஆகிய அனைவரும் தமிழ் அறிஞர்கள். நாவலருக்கு நான்கு மூத்த சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருந்தனர். சகோதரர்கள் நால்வரும் அரசாங்க உத்தியோகத்தர்கள்.

**கல்வி**

தனது ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப் பெற்ற நாவலர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதி நூல்களையும் தமிழையும் கற்றார். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) கல்வி கற்று ஆங்கிலத்திலும் திறமை பெற்றார். அவரது இருபதாவது வயதில் இப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்றார். அப்பாடசாலையின் நிறுவனராயும் அதிபராயும் இருந்தார்.

**சமயப் பணி**

இவர் சைவ சமயம் வளரும் பொருட்டு பிரசங்கம் செய்வதெனத் தீர்மானித்தார். இவரது முதற் பிரசங்கம் வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் 1847 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி நடைபெற்றது. பின்னர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கங்களின் விளைவாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது. வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார்.

**சைவப் பாடசாலை நிறுவல்**

நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகில் உள்ள ஆறுமுக நாவலர் மணிமண்டபம் 1870 ஆம் ஆண்டு கோப்பாயில் ஒரு வித்தியாசாலையை நாவலர் ஆரம்பித்து தமது செலவில் நடத்தினார்.

**இறுதி நாட்கள்**

நாவலரது கடைசிப் பிரசங்கம் 1879 ஆம் ஆண்டு சுந்தர மூர்த்தி சுவாமிகளது குருபூசைத் தினமான ஆடிச் சுவாதி அன்று வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்றது. 1879 ஆம் ஆண்டு (பிரமாதி வருடம்) கார்த்திகை மாதம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாவலரது உடல் நலம் குன்றியது.

05.12.1879 இரவு தேவாரம் முதலிய அருட்பாக்களை ஓதும்படிக் கட்டளையிட்டு அவைகள் ஓதப்படும் போது சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணியத் தலங்களின் விபூதி அணிந்து உருத்திராட்சம் பூண்டு, கங்கா தீர்த்தம் உட்கொண்டு கைகளைச் சிரசின்மேற் குவித்து இரவு ஒன்பது மணியளவில் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பொருட்களின் தரம் குறித்து ஆராய நடவடிக்கை

## நுகர்வோர் அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வரும் உணவுப் பொருட்களின் தரம் மற்றும் விலை குறித்து ஆராயவென தினந்தோறும் விசேட சுற்றி வளைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இச் செயற்பாட்டினை மேலும் துரிதப்படுத்தும் நோக்கில் பட்டதாரிகள் 50 பேரை நுகர்வோர் அதிகார சபையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். தெரிவு செய்யப்பட்டிருக்கும் 50 பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களை கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வழங்கி வைக்கவுள்ளார்.

நாடு முழுவதிலும் நடத்தப்படும் சுற்றி வளைப்புக்களில் மேற்படி பட்டதாரிகளையும் இணைத்துச் செயற்படுவதன் மூலம் பணிகளை துரிதப்படுத்துவதுடன் நுகர்வோர் பாதிப்படைவதனை தவிர்க்க முடியுமென நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நுகர்வோரிடமிருந்து உடனுக்குடன் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதெற்கென புதிதாக நான்கு இலக்கங்களுடன் கூடிய அவசர தொலைபேசி இலக்கமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கும் அனுமதி கிடைத்துள்ளது.

கலாவதியான உணவுப் பொருட்கள், அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுபவை, கட்டுப்பாட்டு விலையை மீறியவை, மனிதப் பாவனைக்கு ஏற்ற தரத்தில் இல்லாதவை, விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை ஆகியன குறித்து நுகர்வோர் சட்ட விதிமுறைகளுக்கமைய சுற்றி வளைப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக தற்போது அரிசி விற்பனை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பண்டிகைக் காலம் அண்மித்துள்ளதால் அரிசி தட்டுப்பாட்டினை ஏற்படுத்த பல வர்த்தகர்கள் திட்டம் தீட்டி செயற்பட்டு வருகின்றனர். எனவே, இவ்வாறான வர்த்தகர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளதையிட்டு கொழும்பு உள்ளிட்ட அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள களஞ்சியசாலைகளை விடேச சோதனைக்கு உட்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# எந்த தடைகள் வந்தாலும் திவிநெகும நிறைவேறும்

## அமைச்சர் பசில் ராஜபக்ஷ உறுதி

(கொழும்பு)

எவ்வாறான தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும் திவிநெகும சட்டம் நிறைவேற்றப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யக்கல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும் திவிநெகும சட்டத்தை அமுல்படுத்தி மக்களுக்கு நன்மைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் சூழ்ச்சித் திட்டங்களை கண்டு அஞ்சப் போவதில்லை.

மூன்று தசாப்த காலம் நீடித்த போரை முடிவுக்குக் கொண்டு வந்ததனை போன்றே திவிநெகும சட்டம் அமுல்படுத்தப்படும். நாட்டில் குறைந்த வருமானம் ஈட்டுவோரின் தொகை கிரமமான முறையில் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

எந்தவொரு முற்போக்கான தீர்மானத்திற்கும் தடைகள் ஏற்படுத்தப்படுவது வழமையானதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, திவிநெகும சட்டம் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. கடந்த 30 ஆம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (அ-2)

# துமிந்தவின் பதாகைகள் தீக்கிரையாக்கப்பட்டன

## கொலன்னாவயில் பதற்றம்

கொலன்னாவ பிரதேசத்தில் ஒட்டப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் பதாகைகள் தீக்கிரையாக்கப்பட்டமையால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. துமிந்த சில்வாவின் பிறந்த தினம் மற்றும் அதனையொட்டிய போதி பூஜைகள் என்பன தொடர்பில் கொலன்னாவ பிரதேசத்தில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் தீக்கிரையாக்கப்பட்டதன் காரணமாக நேற்று முன்தினம் மாலை அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருணிகாவின் ஆதரவாளர்களால் வீதியில் துமிந்த சில்வாவின் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் எரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

ஹிருணிகாவின் ஆதரவாளர்கள் 100 பேர் அடங்கிய குழுவினர் துமிந்த சில்வாவின் பெரிய கட்டவுட் ஒன்றினை வீழ்த்தி எரித்துள்ளதுடன் அப்பகுதியில் இருந்த சிறு சுவரொட்டிகளையும் தீயிட்டதாக வெல்லம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைகாரனுக்கு எதற்கு பூஜை? ஏன் பிறந்த நாள் கொண்டாட்டம்? என கோஷங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இந் நடவடிக்கையால் குறித்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதோடு அமைதியின்மையும் ஏற்பட்டமையால் பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் உசார்படுத்தப்பட்டுள்ளன. (அ-2)

# சவுதியில் அவதியுறும் 500 இலங்கை பெண்கள்

சவுதி அரேபியாவில் 500 இற்கும் மேற்பட்ட இலங்கைப் பணிப் பெண்கள் அவதியுறுவதாக தெரிவிக்கப்படுகிறது. அந்நாட்டின் இரண்டு முகாம்களில் இவ்வாறு இலங்கை பணிப் பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


முகாம்களில் வாழும் இலங்கை பணிப்பெண்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக அங்கிருந்து நாடு திரும்பிய பெண் ஒருவர் தெரிவித்துள்ளார். உணவு, தங்குமிட, அடிப்படை சுகாதார வசதிகளின்றி வீட்டுப்பணிப் பெண்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நெய்தல்/ கருங்குவளை

**Botanical Name-**
***Nymphaea violacea***
**Family-Nymphaeaceae**

இது ஓர் நீர்த்தாவரமாகும். சேற்றில் புதைந்துள்ள அடி மட்டத்தண்டு (கிழங்கு) நீர் நிரம்பும் போது தளிர்விட்டு வளரும். நீரின் மேலே இலை, அரும்பு மலர் முதலியவை காணப்படும். நீர் வற்றியபோது இலை அழிந்து போனாலும் கிழங்கு அழியாது (அடிமட்டத்தண்டு) இருக்கும். கிழங்கிலிருந்து உண்டாகும் இலைக்காம்பினால் இணைந்த நீள் முக்கோண வடிவான அகன்ற வேல் இலை போன்ற பசிய இலைகள் நீரில் மிதந்து காணப்படும். இவ்விலை அல்லியின் இலையைப்



போலவே அடியில் நீண்ட பிளவுற்றிருக்கும். இலைக்காம்பு நீளமானது. நீரளவிற்கும் நீளும் இயல்புடையது. இலைகளின் இரு புறங்களும் உரோமமற்றவை. இருபாலான மலர்கள். நீண்ட மலர்க்காம்பின் நுனியில் தனி மலராக வளரும். மலர்க்காம்பு இலைக் கோணத்தில் உண்டாகும். நீலமும் கரு நீலமுமான மலர். சுற்றடுக்காக அமைந்து அல்லி வட்டம் சிறிது சிறிதாக மகரந்தத் தாள்களாக மாறும் நிலையில் உள்ளன.


### மருத்துவ பயன்கள்

இதனுடைய பூ, மகரந்தம், வேர்க்கிழங்கு ஆகியன மருத்துவ குணங்கள் நிறைந்தவை. இந்தச் செடி பூராகவும் குளிர்ச்சியை உண்டு பண்ணக்கூடியது. உடலுக்கு பலத்தையும் கொடுக்கக் கூடியது.

❖ 100 கிராம் பச்சை பூ இதழ்கள், உலர்ந்த பூ இதழ்கள் 50 கிராம், சீனி 200 கிராம், நீர் இவற்றை சேர்த்து மணப்பாகு செய்து 15 மில்லி அளவு காலை, மாலை அருந்த உடல் வெப்பத்தை தணித்து, இருதயத்தை பலப்படுத்துவதுடன் கண்ணிற்கு குளிர்ச்சியையும் கொடுக்கும்.

❖ இதன் பூக்களினுள் அமைந்திருக்கும் மகரந்தத் தூள்களை சேகரித்து உலர்த்தி பொடித்து 10 கிராமிற்கு 200 மில்லி நீர் விட்டு 1/4 ஆக குறுகக் குடிநீர் காய்ச்சி 30 மில்லி அளவு காலை, மாலை உடல் எரிச்சல், பெரும்பாடு அதாவது பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் இரத்தப் பெருக்கு ஆகியன குணமாகும்.

❖ நெய்தற் கிழங்கின் விதைகளை சேகரித்து உலர்த்திப் பொடித்துக் கொடுக்க நீரிழிவு நோயில் ஏற்படும் தாகம் தணியும். 1-2 கிராம் காலை, மாலை வெந்நீரில் எடுக்க வேண்டும். அல்லது நெய்தற் கிழங்கின் விதைகள் 10 கிராம் அளவு எடுத்து 4 மடங்கு நீர் விட்டு 1/4 ஆக குறுக்க காய்ச்சி 15-30 மில்லி அளவு நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் தாகத்திற்கு கொடுக்கலாம்.



❖ நெய்தல் வேர்க்கிழங்கு சேகரித்து கழுவி சிறு துண்டுகளாக்கி நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு காலை, மாலை 100 மில்லி காய்ச்சிய பசுவின் பாலில் சிறிதளவு சீனியும் சேர்த்து எடுக்க மூலநோய் குணமாவதுடன் உடலிற்கு பலத்தையும் குளிர்ச்சியையும் கொடுக்கும்.

❖ மேலும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சித்த மருத்துவத்தில் **கெற்பரட்சனி** என்று 10 மாதங்களுக்கும் ஒவ்வொரு மாதத்திற்கும் கொடுக்கப்படுகிறது. அதில் முக்கியமாக மாதங்களுக்கு கொடுக்கப்படும் மூலிகைச் சரக்குகளுள் நெய்தற்கிழங்கு முக்கியமாகச் சேர்க்கப்படுகின்றது. பொதுவாக 2 ஆம் மாதம், 4 ஆம் மாதம், 5 ஆம் மாதம், 7 ஆம் மாதம், 8 ஆம் மாதம், 10 ஆம் மாதங்களில் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் முதல் 3 நாட்களுக்கு முறைப்படி குடித்துவர கருச்சிதைவு இன்றி பூரண சுகத்துடன் கர்ப்பம் வளரும் என்று பரராசசேகரம் கெர்ப்பரோக நிதானத்தில் கூறப்பட்டுள்ளது.

**2 ஆம் மாதத்தில்:-** நெய்தற் கிழங்கு, கோனாக்கிழங்கு, அதிமதுரம், இஞ்சி ஒவ்வொன்றும் 5 கிராம் அளவு எடுத்து பசுவின் பாலில் (100 மில்லி) கலக்கி குடிக்க வேண்டும்.

**4 ஆம் மாதம்:-** நெய்தற்கிழங்கு, சீந்தில் தண்டு, நெருஞ்சி வேர், நிலப்பனங்கிழங்கு ஒவ்வொன்றும் 5 கிராம் எடுத்து பசுவின் பால் (100 மில்லி) கலக்கி கொடுக்க வேண்டும்.

**5 ஆம் மாதம் :-** சாரணைக்கிழங்கு (வேர்), இலுப்பை பூ, அழிஞ்சில் விதை, தகரை, எள்ளு, நெய்தற்கிழங்கு ஒவ்வொன்றும் 5 கிராம் எடுத்து பசுவின் பால் 100 மில்லியில் கலக்கி குடிக்க வேண்டும்.

**7 ஆம் மாதம்:-** கச்சோலம், ஆமணக்கம் வேர், நெய்தற்கிழங்கு ஒவ்வொன்றும் 5 கிராம் எடுத்து நீரில் அரைத்து 100 மில்லி நீரில் கலந்து குடிக்க வேண்டும்.

**8 ஆம் மாதம்:-** அதிமதுரம், தாமரை வித்து, கோரைக் கிழங்கு, விளாம்பிஞ்சு, திப்பிலி, நெய்தற்கிழங்கு ஒவ்வொன்றும் 5 கிராம் எடுத்து பசுவின் பால் 100 மில்லியில் அரைத்து கலந்து குடிக்க வேண்டும்.

**10 ஆம் மாதம்:-** கோரை, முந்திரிகைப் பழம், நெய்தற்தண்டு, சீனி 20 கிராம் சேர்த்து அரைத்து தேனில் குழைத்து கொடுக்க வேண்டும்.

இங்கு கூறப்பட்ட மூலிகைகளின் குணத்தை ஆராயுமிடத்து அவற்றுள் பல கருப்பை முதலியவற்றிற்கு பலத்தை கொடுப்பதுடன் கருவையும் வளர்க்கும் தன்மை உடையதாக காணப்படுகின்றன. குறிப்பாக நெய் தற் கிழங்கிற்கு குருதிப் போக்கை நிறுத்தும், சிறு நீரை பெருக்கி இரத்த ஓட்டத்தை சீராக்கும் தன்மையுண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றப்பட்டன?

7. புறச்சந்தானகுரவர் நால்வரின் பெயர்களையும் தருக.

8. அன்னதானக்கந்தன், அலங்காரக் கந்தன் என்றழைக்கப்படும் முருகன் ஆலயங்கள் எவை?

9. இலங்கையில் சைவத் தமிழ்க் கல்விப் பாரம்பரியங்களைப் பேணிக்காத்த நிறுவனங்களில் இரண்டு தருக.

10. ஆலயத் தொண்டுகளில் ஏதேனும் நான்கு எழுதுக.

(02) பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை வரிப்பிழையின்றி எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக. பாடியவர், பாடிய திருத்தலம் என்பவற்றையும் எழுதுக.

i. "வேயுறு தோளி பங்கன்......"
ii. "கோலமால்வரை மத்தென....."
iii. "விநாயகனே வெவ்வினையை....."
iv. "ஆதியும் அந்தமும்...."
v. "ஆலந்தானுகந்து....."

(03) "காப்பது விரதம்" (ஔவையார்)

விரதம் என்பதற்கு நாவலர் தரும் விளக்கம் யாது?

விரதங்களை அனுட்டிப்பதால் விருத்தியடையும் நான்கு பண்புகளை எழுதுக.

கேதார கௌரி விரதம் அனுட்டிப்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகள் யாவை?

(04) i. மருணீக்கியாருக்குத் திருநாவுக்கரசர் என்ற பெயர் வரக் காரணம் யாது?

ii. திருநாவுக்கரசருக்குச் சமணர்கள் இழைத்த கொடுமைகள் (04) எழுதுக.

iii. நாவுக்கரசரின் பற்றற்ற நிலையை இறைவன் உலகுக்கு எவ்வாறு வெளிப்படுத்திக் காட்டினார்?

(05) i. அட்டமா சித்திகளும் எவை?

ii. தமிழ் நாட்டில் வாழ்ந்த சித்தர்களில் நால்வர் பெயர் தருக.

iii. செல்லப்பா சுவாமிகளின் குரு யார்?

(06) i. நாட்டார் தெய்வ வழிபாட்டின் பொது இயல்புகள் நான்கு தருக.

ii. கண்ணகி வழிபாட்டின் பொழுது பாராயணம செய்யும் பாடல்கள் நான்கு எழுதுக.

iii. கிராமியச் சடங்கின் பொழுது இடம்பெறும் கலை நிகழ்ச்சிகள், இசைக்கருவிகள் என்பவற்றில் இரண்டினை எழுதுக.


(07) எவையேனும் இரண்டிற்குச் சிறு குறிப்பு எழுதுக.

i. ஸ்ரீலஸ்ரீ - ஆறுமுகநாலர்
ii. திருக்கேதீச்சர ஆலயம்
iii. தலயாத்திரை
iv. இராம கிருஷ்ணமிஷன்

# நாவலர் நமக்குச் செய்த நற்பணிகள்

## இவரது குருபூசை தினம் இன்று

**சைவப்புலவர்**
**இராசையா ஸ்ரீதரன்**



உலகம் போற்றும் உன்னதமான மொழியான தமிழும் சகலரும் விரும்பும் சன்மார்க்க நெறியான சைவமும் நின்று நிலைபெற்று நித்தமும் ஒளிர தன்னையே அர்ப்பணித்த மகான் நாவலர் பெருமான். சைவ சமயிகள் எல்லோரும் நெற்றியில் திருநீறு துலங்க சைவர்களாக வாழ்வதற்கு அடியத்திவாரமிட்டவர் நாவலர். சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபட்ட இவரது குருபூசை நன்னாள் இன்றாகும்.

நாம் இன்று சைவசமயிகள் என்று சொல்லிக்கொண்டு தலைநிமிர்ந்து வாழ்கிறோம் எனில் அதற்கு காரணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களே! இதனை யாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது. சைவத்தின் மேன்மையையும் தமிழின் தொன்மைச் சிறப்பையும் உலகத்தவர்க்கு உணர்த்த எண்ணிய இவர் கதாபிரசங்கம், புராணபடலம், சொற்பொழிவு முதலானவற்றை முறையே நிகழ்த்தி, தமிழ் நூல்களை அச்சேற்றி வெளியிட்டு அரும்பணியாற்றினார்.

யாழ்ப்பாணத்து நல்லூரிலே 1822 ஆம் ஆண்டு டிசம்பர் 18 இல் கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதிகளுக்குப் பிள்ளையாக அவதரித்த இவர் நாடு போற்றும் நல்லவராக நற்பணிகள் பலவாற்றி சமய சயம, சமூகத் தொண்டுக்காக தம்மையே அர்ப்பணித்து நற்சேவையாற்றினார்.

நாவலரின் நல்ல எண்ணங்கள் சமூக வளர்ச்சிக்கும் சமய அபிவிருத்திக்கும் கால்கோளாக அமைந்தன. இவர் எழுதி வெளியிட்ட பாலபாடம், சைவவினாவிடை என்பன மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வாழ்க்கையில் உண்மை, நீதி, நியாயம்,அறம் பல வளர்த்து நேர்மையே நிறைந்த செல்வம் என்பதை நிலைநாட்டியதெனில் மிகையாகாது. மகத்தான இப்பணியைநாம் உள்ளளவும் நினைக்க வேண்டும்.

"நல்லை நகராறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே ? சுருதி எங்கே? புராண ஆகமங்கள் எங்கே? பிரசங்கம் எங்கே?" என்று பாடுகிறார். சி.வை. தாமோதரம்பிள்ளை. நாவலர் ஆரம்பித்த சைவப் பிரகாச வித்தியாசாலை இலங்கையில் கல்வி வளரவும் கல்விமான் களை உருவாக்கவும் துணை புரிந்ததெனில் இவரது அருமை பெருமைதான் என்னே என்று வியக்கின்றார் அங்கு ஆசிரியராகப் பணிபுரிந்த செந்திநாதையர். இவரது பேச்சாற்றலையும் நாவன்மையையும் கண்ணுற்ற இந்திய திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என்ற படத்தை வழங்கிச் சிறப்பித்தது.

எல்லோரும் கல்விச் செல்வத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் பரந்த நோக்கில் இலவச கல்விப் போதனை, இலவச திண்ணைப்பள்ளி, இலவச சமய பாட வகுப்புகள் மற்றும் தாய்மொழிக் கல்வி என்பனவற்றை உருவாக்கி அதற்கு ஏற்ற முறையில் தராதரமுடையவர்களை நியமித்து, அச்சியந்திரங்களை வரவழைத்துப் பாடநூல்களை அச்சிட்டு அறப்பணி புரிந்த நாவலர் கிறிஸ்தவ நூலான பைபிளையும் அதாவது விவிலிய நூலைத் தமிழில் மொழியெர்த்து தவினார் என்பதையும் நாம் மறக்க முடியாது.

ஏட்டுச் சுவடியாகவிருந்த பல நூல்களை காகிதத்தில் அச்சேற்றியதுடன் பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றையும் அச்சிட்டுப் புத்தக வடிவில் வெளியிட்ட பெருமை இவரையே சாரும்.மேலும், ஆலயங்களில் உயிர்ப்பலியை நிறுத்த வேண்டும் என்ற துண்டுப்பிர சுரங்களை வெளியிட்டு வேள்வியைக் குறைத்தார். இருபாலைச் சேனாதிராயமுதலியார், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், சரவணமுத்துப் புலவர் முதலானோரிடம் குருகுல முறைப்படி இலக்கண இலக்கியங்களையும் சித்தாந்த சமய சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

சைவத்தின் தொன்மைச் சிறப்பையும் மகோன்னதத்தையும் வெளிப்படுத்துவதற்காகத் தம்மாலான அறப்பணிகளை முழுமூச்சுடன் செய்து வந்த நாவலர்பெருமான் ஒருமுறை சொற்பொழிவுக்கு அழைத்த போது ஆயத்தமில்லை என்றாராம். பின்பு நான் ஆயத்தமில்லைதான். மரணத்துக்கு ஆயத்தமில்லை என்று தமது பேச்சாற்றலை வெளிப்படுத்திப் பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார். இது அவரது திறமைக்கு நல்ல சான்றாகும்.

தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் சமயப் பணிக்கே அர்ப்பணித்த ஆறுமுகநாவலர் 1879 ஆம் ஆண்டு கார்த்திகை மாத மக நட்சத்திரத்திலே சிவபதமடைந்தார். தம்முடைய இறுதி மூச்சுவரை சமூக, சமய சேவைகளை ஆற்றிய இவர் குருபூசையைக் கொண்டாடினால் மட்டும் போதாது; அவர் விட்டுச் சென்ற அறப்பணிகளைச் செவ்வனே ஆற்றுவதே நாம் அன்னாருக்குச் செய்யும் கைமாறாகும்.

# தெரிவுக்குழு முன் ஆஜராகிறார் பிரதம நீதியரசர் ஷிராணி

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா தம்மீதான குற்றவியல் பிரேரணை தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முன் சமுகமளித்திருந்தார்.

பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணை தொடர்பாக நேற்றைய தினம் ஆராய பாராளுமன்றத்தில் பாராளுமன்ற தெரிவுக் குழு கூடியிருந்தது.

இதன்போதே அவர் தெரிவுக்குழு முன் பிரசன்னமாகியிருந்தார்.

இதன்போது பிரதம நீதியரசருக்கு ஆதரவாகவும் எதிராகவும் உயர் நீதிமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

பாராளுமன்ற வளாகத்திலும் பிரதம நீதியரசருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை கடந்த நவம்பர் மாதம் 23ஆம் திகதி கூடிய நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன்னும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ - 2)

# முன்பள்ளி கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை முன்பள்ளியின் கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் நல்லூர் சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள முன்பள்ளிக் கட்டடத்தில் மு.ப 9 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை நடைபெற வுள்ளது. மேற்படி கண்காட்சியினை ஏனைய முன்பள்ளி சிறார்கள் மற்றும் சிறுவர்கள் அனைவரும் பார்வையிட்டு பயன்[illegible] கேட்டுள்ளது. (அ)

# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யா / கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் ஒளி விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை ஆலய முன்றலில் பாடசாலை முதல்வர் திருமதி.கு.அசோக் குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீ.சு.சற்குணராசா, சிறப்பு விருந்தினராக கோப்பாய் பங்குத்தந்தை அருட்பணி வென்சஸ்லஸ், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், ஆரம்பப் பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி ஜெ.டொறின்ரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக கோப்பாய் தெற்கு ஜே/261 கிராம சேவை அலுவலர் சபாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (அ-9)

# ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியாக அணிக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டியை எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 8 மணி தொடக்கம் நடாத்தவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் அன்றைய தினங்களில் காலை 8 மணிக்கு சமூகம் தந்து போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

இப்போட்டிகள் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்திலும் தஞ்சர் கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலும் இடம் பெறவுள்ளது. (அ - 3 -24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று முன்தினம் கிளி.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.இதில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# கல்விசார் செயற்பாடுகளுக்கு அதிகளவான நிதியொதுக்கீடு

## அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

வன்னி மாவட்டத்தில் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி தெரிவில் எவ்வித பாகுபாடுகளும் காட்டப்படவில்லை என வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் அமைச்சருமான றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட சூடுவெந்தபிளவு அல்-இக்பால் மகா வித்தியாலத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அதிபர் சேஹு இராஜிபு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேலும் அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவிக்கையில் ,

வன்னி மாவட்ட மாணவ சமூகத்தின் கல்வி மேம் பாட்டுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் என்ற வகையில் இனங்களுக்கு அப்பால் செய்து வருகின்றேன்.

வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவில் மூன்று பாடசாலைகளும் வவுனியா மற்றும் மன்னாரில் தலா இவ்விரு பாடசாலைகள் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 5 தமிழ் பாடசாலைகளும் இரண்டு முஸ்லிம் பாடசாலைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கல்வி என்பது எல்லோருக்கும் பொதுவானது.கற்ற சமூகத்தை வன்னியில் ஏற்படுத்த வேண்டும் என்பது எனது ஆசையாகும்.அதற்காக எனது ஒதுக்கீட்டிலும் மாவட்ட அபிவிருத்தி திட்டங்களிலும் கல்விசார் செயற்பாடுகளுக்கு அதிகமான நிதியினை நான் ஒதுக்கீடு செய்துள்ளேன்.

செட்டிக்குளம் வலயக்கல்வி பிரிவில் உள்ள தமிழ் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க கல்வி பணிப்பாளர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளேன்.

இனம், மதம், பிரதேசம் என்ற பாகுபாடுகளை கடந்து மனித தேவைகளை முதன்மைப்படுத்தியே எனது செயற்பாடுகள் அமைந்துள்ளன.

மக்களது அபிவிருத்திகளை பொறுத்துக் கொள்ள முடியாது.அன்று எதனை இந்த மண்ணில் செய்தார்களோ அவர்கள் இன்றும் இந்த மாவட்டத்தில் இன பிளவை யேற்படுத்த முயற்சிக்கின்றனர். அவர்களது செயற்பாடுகளை மக்கள் தொடர்ந்து நிராகரித்த வண்ணமே உள்ளனர். இவர்கள் எத்திட்டத்தை தீட்டினாலும் இறைவனின் உதவியால் அதனை முறியடித்து எமது மாவட்ட மக்களுக்கு தேவையானதை பெற்றுக்கொடுப்பேன் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் ஆணையாளர் ஷாஹிப் மொஹுதீன், அமைச்சரின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் முத்து முஹம்மத், செட்டிக்குளம் பிரதேச சபை உறுப்பினர் இர்பான், வவுனியா நகரசபை உறுப்பினர் அப்துல் பாரி, வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ-9-266)

# அபிவிருத்தி நிறைந்த தரமான வாழ்வே மக்களுக்கு தேவை

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

மக்களின் எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும் தீர்மானங்களே இக்காலத்தின் தேவையாகும்.எமது மக்கள் மீண்டும் ஒரு இருண்ட யுகத்திற்கு செல்ல முடியாது. எனவே எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும் தீர்மானங்களை மேற்கொள்வதில் மக்கள் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிலுள்ள கம்பகாமம் கிராமத்திற்கு 150 இலட்சம்ரூபா செலவில் கடந்த 2 ஆம் திகதி மின்சாரம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களை எவரும் தங்களின் அரசியல் இலாபங்களுக்காக ஏமாற்றிவிட முடியாது. மக்கள் தங்களுக்கு எது தேவையில்லை என்பது தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

அவர்கள் மீண்டுமொரு கடந்த காலத்திற்குச் செல்லத்தயாராக இல்லை. அபிவிருத்தி நிறைந்த வளமான வாழ்வே இன்றைய மக்களின் முக்கிய தேவையாகும். எல்லாவற்றையும் இழந்து வந்து மீள்குடியேறிய மக்களுக்கு அதனை ஏற்படுத்திகொடுக்க வேண்டியதே உண்மையான மக்கள் பிரதிநிதிகளின் கடமையுமாகும். அதுவே அந்த பிரதிநிதிகளின் பணியுமாகும்.

மேலும் அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்துள்ளனர்.நாளுக்கு நாள் மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து எமக்கு வரும் கோரிக்கைகள் அதனையே புலப்படுத்துகிறது. எனவே அந்த வகையில் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதில் நாம் பல்வேறு வழிகளில் அதிக கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

பளை பிரதேசத்தில் நாம் அதிகளவான அபிவிருத்திகளை முன்னெடுத்துள்ளோம். இந்தப் பிரதேசங்களில் எழுபத்தைந்து வீதமான மக்களின் வீட்டுப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.மேலும் இயக்கச்சி, சின்னத் தாளையடி, பேராளை போன்ற பிரதேசங்களுக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டன.எனவே இவ்வாறு பல அபிவிருத்தி பணிகளுக்கு [illegible] பட்டதோடு [illegible] ட்டும் உள்ளன எனவும் தெரிவித்தார். (அ-2)

# நாடுகடத்தப்படவிருந்தவர்கள் நீதிமன்றத்தின் உதவியை நாடினர்

## ஆஸி.அரசுக்கு புதிய சவால்

(சிட்னி)

அவுஸ்திரேலிய அரசாங்கத்துக்கு புதிய சட்ட சவால் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. நாடுகடத்தப்படவிருந்த 56 இலங்கையர்கள் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் சிட்னி நீதிமன்றம் குறித்த இலங்கையர்களின் நாடுகடத்தலுக்கு இடைக்கால தடையுத்தரவை நேற்று முன்தினம் காலை பிறப்பித்துள்ளது.

இந்த தடை உத்தரவு நாளை வியாழக்கிழமை வரை அமுலில் இருக்கும் என்றும் இதன் பின்னர் மீண்டும் நீதிமன்ற விசாரணைகள் நடைபெறும் எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அகதிகளுக்கான நடவடிக்கைக்குழு என்ற அமைப்பு அகதிகள் சார்பில் இந்த இடைக்கால தடையுத்தரவு மனுவை தாக்கல் செய்தது.

எனினும் குறித்த இலங்கையர்கள் நாடு கடத்தப்படுவதற்கான எவ்வித ஆயத்தங்களும் செய்யப்படவில்லை என்று அவுஸ்திரேலியாவின் குடிவரத்துறை அமைச்சர் கிறிஸ் போவன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய சட்டத்தின் படி குறித்த அகதிகள் பாதுகாப்பு கருதி தடுத்து வைக்கபட்டுள்ளதன் காரணங்களை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் சிட்னி நீதிமன்றம் அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது. (அ-2)

# இலவச மின்சார விநியோகம் நடைமுறைப்படுத்தப்படுமா?

## கிளிநொச்சி மக்கள் அங்கலாய்ப்பு

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் இது வரை மின்சாரம் வழங்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின்கம்பிகள் பொருத்தப்பட்டு பல மாதங்களாகியும் இன்னமும் பயன் பெறத்தக்க வகையில் மின்சாரம் கிடைக்கவில்லை என அப்பிரதேச மக்கள் கவலை கொள்கின்றனர். வடக்கின் வசந்தத்தின் கீழ் அனைவருக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது பணத்தை செலுத்துபவர்களுக்கு மட்டும் முன்னுரிமையாக மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

பணம் செலுத்த முடியாத நிலையில் உள்ள மக்கள் எவ்வாறு மின்சாரத்தை [illegible] முடி[illegible] என கேள்வி எழுப்புகின்றனர். எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கையினை மேற்கொண்டு வடக்கின் வசந்தத்தின் கீழ் மின்சார வசதியை விரைவில் ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-254)

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை சின்னம்மா

அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னம்மா 03.12.2012 திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் லோகநாதன், சண்முகநாதன் (யாழ்.மாநகர சபை ஊழியர்) நாகேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் (ஜேர்மனிய சட்ட ஆலோசகரும் மாண்புமிகு ஜனாதிபதியின் ஆலோசகரும் இந்து பௌத்த கலாசார பேரவையின் இணைப்புச் செயலாளரும்), இராசையா சந்திரகுமார் (ஜேர்மன்), கமலசாந்தினி (இந்திரா- லண்டன்) ஜெயமாலினி ஆகியோரின் மாமியாரும் அனங்கன், சாரங்கன், யாதவன், விதுசா, அருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு என்னும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் 05.12.2012 புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் குற்றம் உள்ளவர்கள் ஒவ்வொரு கண்ணும் தங்களைப் பார்ப்பதாக எண்ணுவர்.
–ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சனி சந்திர பார்வை அவ்வளவு நல்லதல்ல

காலமாற்றம் எல்லாவற்றிலும் மாற்றத்தை ஏற்படுத்திவிடுகின்றது.

அந்த வகையில் சோதிடத்திலும் மாற்றங்கள், புதுப்புதுக் கண்டறிவுகள் இடம்பெறவே செய்கின்றன.

நவீன சோதிடர்கள் இலக்கின பாவங்கள், கிரக பாவங்கள் என்பவற்றுக்கு கொடுக்கின்ற முன்னுரிமையை விட, சனி சந்திர பார்வைக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவமே அதிகம் எனலாம்.

சனியும், சந்திரனும் ஒன்றையொன்று பார்ப்பது நல்லதல்ல என்பது சமகால சோதிடர்களின் முடிவு. இந்த முடிவு சோதிடத்தில் மட்டுமல்ல,

அரசியலில், சமூக செயற்பாடுகளில் கூட, சனி, சந்திர நிலையில் இருப்பவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்காமல் இருப்பது கலகநாசம்.

இருந்தும் துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு நேர் எதிராக பொலிஸ் அரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பொலிஸாரையும் பொலிஸார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தையும் நேருக்கு நேர் பார்க்கின்றனர். இது சனி சந்திர பார்வை போன்றது.

சனி சந்திர பார்வையில் கடைக்கண் பார்வை இருந்தாலும் பரவாயில்லை. தாக்கம் குறைவு எனலாம்.

ஆனால் இதுநேரடிப் பார்வை. எந்தநேரமும் கலகம் ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டென்பது நம் சோதிடக் கணிப்பு.

ஐயா! உங்கள் சோதிடக் கணிப்பில் சனி யார்? சந்திரன் யார்? என்று கேட்டுவிடாதீர்கள்.

எது சந்திரனாக எது சனியாக இருந்தாலும் பரவாயில்லை.

நம்மைப் பொறுத்தவரை இரண்டினதும் பார்வை தான் பிழை.

எனவே தோஷ பரிகாரம் உடனடியாகச் செய்ய வேண்டும்.

அதற்காக தன்சொந்த வீட்டில் சொந்தக் கிரகம் இருப்பதை இடமாற்ற வேண்டும் என்று எந்தச் சோதிடரும் பரிகாரம் கூறமாட்டார்.

ஆக, வக்கிரமடைந்த அல்லது மாற்றமடைந்த கிரகங்கள்தான் விலகிக் கொள்ள வேண்டும்.

சனி சந்திர பார்வையால் ஏற்படக்கூடிய கலகத்தை தவிர்க்கும் பொருட்டு கிரகத்தை இடமாற்றுவதற்காக காளகஸ்திக்குச் சென்று நவக்கிரக பூசையா? நடத்த முடியும். இல்லவே இல்லை.

இதற்கெல்லாம் ஒரேவழி நம்பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையில் பேராசிரியர்கள் அடங்கிய குழுவினர் கிரக தோஷம் நீக்க ஒன்றாகக்கூடி வேதமந்திரம் ஓதவேண்டும்.

அந்த வேத மந்திரம் சமகால சூழமைவை எடுத்துக்காட்ட; பொலிஸ்மா அதிபர், கட்டளைத் தளபதிகள், கிரக விலக்கிற்கு உத்தரவிடுவர்.

கூடவே சனி சந்திர பார்வை இல்லாதுபோக பதியை விட்டுக் கிளப்பிய பத்தாம் இடத்து வியாழன் கைதான மாணவர்களை விடுவிக்க நிலைமை சுமுகமாகும்.

அட! கிரகங்கள் பிறகும் மாறாமலா விடப் போகின்றன என்று சலித்து வேத மந்திரம் ஓத மறந்துவிடாதீர்கள்.

# இறம்பைக்குளம் பாடசாலையில் மைதானத்தில் புத்தர் சிலை; நிர்க்கதி நிலையில் மாணவர்கள்!

(வவுனியா)

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் மைதானத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் எதிர்காலத்தில் அந்த மைதானத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் முன்புறம் உள்ள விளையாட்டு மைதானத்திற்குள் பழமை வாய்ந்த அரச மரம் ஒன்று உள்ளது. அதனை அண்டிய பிரதேசத்தில் பொது மயானமும் அமைந்துள்ளது. இந்த அரச மரத்தால் இப்பொழுது புதிய பிரச்சினை கிளம்பியுள்ளது.

ஒரு சில தினங்களுக்கு முன்பு இம் மரத்தின் கீழ் எளிதில் யார் கண்ணுக்கும் புலப்படாத வகையில் புதிதாக இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது விமானப் படையைச் சேர்ந்த வீரர் ஒருவர் மரத்தைக் காவல் காப்பதற்காக நிறுத்தப்பட்டுள்ளார்.

வவுனியாவின் பழம் பெரும் பாடசாலைகளில் ஒன்றான இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் சுமார் 3 ஆயிரம் மாணவர்கள் தமது விளையாட்டுத் திறமையை மேம்படுத்திக் கொள்வதற்கு இந்த மைதானத்தையே நம்பியுள்ளனர்.

ஆண்டுதோறும் நடைபெறுகின்ற பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகளை நடத்துவதற்கு பாடசாலை நிர்வாகம் விமானப் படையின் அனுமதி பெற வேண்டிய நிலையில் உள்ளது.

அதனைப் போன்றே இறந்தவர்களை புதைப்பதற்கோ அல்லது எரிப்பதற்கோ கூட இவர்களின் அனுமதியை பெற வேண்டியுள்ளது.


காலம் காலமாக பாடசாலை மாணவர்களின் விளையாடும் இடமாக திகழும் விளையாட்டு மைதானத்தை பாடசாலை நிர்வாகத்திடம் முழுமையாக ஒப்படைக்கும்படி பலரும் கோரிக்கை விடுத்தும் அவை இன்றுவரை நிறைவேற்றப்படாது உள்ளது.

அதனைப் போன்றே, நெடுங்காலமாக வவுனியா மக்கள் பாவித்துவரும் மயானத்தையும் எவ்வித இடையூறும் இன்றி பொதுமக்களிடம் கையளிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத் தும் இது வரை எதுவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வில்லை.

தற்போது புதிதாக புத்தர் சிலை வைத்திருப்பதனால் அந்த இடத்தை படைத் தரப்பு தனது நிரந்தரக் கட்டுப் பாட்டில் எடுத்துக் கொள்ளப் போகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-6)

# இலங்கையில் கடந்த காலங்களில் இதுபோல் பலமான அரசு இருக்கவில்லை

## இந்து பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் தெரிவிப்பு



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தைப் போன்று பலமான அரசாங்கம் இலங்கையில் கடந்த காலங்களில் இருக்கவில்லை. எதிர் காலத்திலும் இலங்கையில் இப்படியான பலமான அரசாங்கம் அமையாது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதிக்கு தமது ஆதரவை வழங்க வேண்டும் என இந்தியாவின் இந்து பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் என்.ராம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து இந்தியா சென்ற ஊடகவியலாளர்கள் குழுவொன்று சென்னையில் நடைபெறும் ஊடகவியலாளர்களின் ஆசிய பயிற்சி மத்திய நிலையத்திற்கு சென்றிருந்த போது ராம் இதனைக் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகள் போரில் அழியும் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் புலிகளுக்கு அஞ்சி அமைதியான கொள்கையை கடைப்பிடித்து வந்தனர்.

எனினும் தற்போது விடுதலைப் புலிகள் அழிந்துவிட்டதால் தமது கிடைத்துள்ள அரசியல் சுதந்திரத்தை எவருக்கும் அஞ்சாது நாட்டுக்கு நன்மை தரும் வகையில் பயன்படுத்த வேண்டும் இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் ஜனாதிபதியுடன் ஒன்றாக கைகோர்த்துக் கொண்டு இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை ஏற்படுத்த தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் ராம் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் இரண்டு பாரிய தவறுகள் காரணமாக தமிழகத்தில் இருந்து அந்த அமைப்புக்கு கிடைத்து வந்த உதவிகள் முற்றாக இல்லாமல் போயுள்ளன. 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்துடன் போரில் ஈடுபட்டமை, 1991ஆம் ஆண்டு இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை [illegible]லை செய்தமை ஆகிய காரணங்க[illegible]னால் இந்திய அரச மற்றும் மக்களிடம் இருந்த அனுதாபம் இல்லாமல் போனது. தற்போது இந்திய மக்கள் குறிப்பாக தமிழக மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எந்த விதத்திலும் உதவுவதற்குமுன் வரமாட்டார்கள்.

எனினும் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று அவசியம் என்ற நிலைப்பாட்டில் தமிழக மக்கள் இருக்கின்றனர். தமிழகத்தில் நடைபெற்ற டெசோ மாநாட்டின்போது முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனக் கூறிய போதிலும் இது ஒரு அரசியல் கருத்தாகும். இது குறித்து தமிழக அரசியல்வாதிகளுக்கு எந்த அக்கறையுமில்லை எனவும் ராம் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# இலங்கை விவகாரம் குறித்து பிரி.தூதுவருடன் கலைஞர் பேச்சு

(சென்னை)

இலங்கை விவகாரம் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி, பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் மைக் நிதர்வானிகாஸுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் கருணாநிதிக்கும் பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகருக்கும் இடையில் சென்னையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.


அண்மையில் சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டுத் தீர்மானங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது கருணாநிதி விளக்கம் அளித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் கைது தொடர்பில் கருணாநிதி அதிருப்தி வெளியிட்டுள்ளார். மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளார்.

இந்த விவகாரத்தில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தலையீடு செய்ய வேண்டும் என கருணாநிதி கோரியுள்ளார். (எ-11)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## இந்த யுகத்தின் அவதார புருஷர்



ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்த உலகில் தோன்றிய நாளிலிருந்தே சத்தியயுகம் (பொற்காலம்) ஆரம்பித்துவிட்டது.

புதிய யுகத்திற்கேற்ற யோகம், ஞானம், பக்தி, கர்மம் ஆகியவை இணைந்த ஒரு புதிய மதத்தை அவர் தோற்றுவித்திருக்கிறார்.

**நான் எவ்வளவு காலம் வாழ்கிறேனோ, அவ்வளவு காலம் வரையிலும் கற்க வேண்டியவற்றை கற்றுக்கொண்டேயிருக்கிறேன்** எனக்கூறிய கல்வி கற்காத ஒரு இளைஞர் (ஸ்ரீராமகிருஷ்ணர்) தன்னுடைய தியாகத்தின் வலிமையால் (ஆன்மீக பலத்தால்) பழம்பெரும் பண்டிதர்களை எல்லாம் தன்முன் பணியும் படி செய்தான்.

வேதங்களின் சொரூபமாக இந்த மகா பிரபு இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையடி சாஸ்திரம்




பொதுவாக அட்டதிக்கு பாலகர்கள் எனும் ஈஸானன், இந்திரன், அக்கினி, எமன், நிருத்யை, வருணன், வாயு, குபேரன் ஆகிய திசைக் காவலர்களின் தன்மைகளை அனுசரித்து ஒரு வீட்டில் அமைய வேண்டிய ஸ்தானங்களை அறிந்துள்ளோம்.

அட்டதிக்கு பாலகர்களைப் போலவே, நவக்கிரகங்களுக்கும் அவரவர்களுக்குரிய திசைகள் உண்டு. அந்தந்த திசைக்குரிய காரகத்தன்மைகளை அனுசரித்து வீட்டில் அமைய வேண்டிய அறைகள் அமைந்தால் அது மேலும் உயர்வையும் சௌபாக்கியத்தையும் தரும்.

சூரியன் சிறந்த உடல் ஆரோக்கியத்தை தருகின்றவன். சந்திரன் புகழையும் கீர்த்தியையும் கொடுக்கின்றவன். செவ்வாய் எல்லா வகை செல்வங்களையும் நல்க வல்லவன். புதன் நற்குணங்களைத் தர வல்லவன்.

குரு மரியாதையைத் தருகின்றவன். சுக்கிரன் சாமர்த்தியத்தையும் சனி சந்தோஷத்தையும் தரக் கூடியவன்.

இராகுவும் கேதுவும் குலத்தை விருத்தி செய்ய அருள் பாலிப்பவர்கள் ஆவார்கள்.

நவக்கிரகங்களின் அனுக்ரஹ சக்திக்கேற்ப அவரவர்கள் அமைந்துள்ள திசைப் பகுதியில் வீட்டின் அறைகள் அமைவது நலம். அட்டதிக்கு பாலகர்கள் தன்மையை ஒட்டி வாஸ்துப்படி சரியாக அமையும் ஸ்தானங்கள் நவக்கிரகங்களின் தன்மைப்படியும் சாதகமாகவே அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது முன்னோர்கள் காலத்தில் கட்டடக் கலையில் ஈடுபட்ட கலைஞர்கள் , மேஸ்திரிகள், தொழிலாளர்கள் அனைவருமே ஓரளவு வாஸ்து சாஸ்திர உண்மைகளைத் தெரிந்து வைத்திருந்தார்கள்.

அதனால்தான் ஆலயமானாலும் சரி வியாபார ஸ்தலமானாலும் சரி, சமூகக் கூடங்களானாலும் சரி, வீடானாலும் சரி வாஸ்து முறைப்படி அமைத்தார்கள்.

இந்தக் காலத்திலும் பல கட்டட நிபுணர்களுக்கு வாஸ்து சாஸ்திரம் பற்றித் தெரியும். கட்டடக்கலை பற்றிய தொழில்நுட்பப் பாடப் பகுதிகளிலும் கூட ஆகம, வாஸ்து, சாஸ்திர விதி முறைகள் பற்றித் தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. பிரசித்தி பெற்ற கட்டடக் கலைப் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் வாஸ்து சாஸ்திரம் கற்பிக்கப்படுகிறது.

ஆனால், நடைமுறைக்கு வரும்போது 5 ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பில் 20 ஆயிரம் சதுர அடி, மூன்று, நான்கு மாடிக் கட்டடங்கள் போன்ற வீடுகள் கட்டி, வியாபார ரீதியாக அவற்றில் இலாபம் சம்பாதிக்க எண்ணும் போது ஒவ்வொரு சதுர அடியும் வீணாகாமல் ஏதாவது ஒரு அறை, கழிவறை, பல்கனி என்றமைத்து விடுகிறார்கள்.

ஒரே பெரிய கட்டடத்தில் சிறிய சிறிய அறைகள் என்றெல்லாம் கட்டும்போது வாஸ்து விதிகளைக் கடைப்பிடிப்பது கடினமாக இருக்கிறபடியால் அந்த விதிகளை மீறி, பல ஸ்தானங்களை அமைத்து வீடு கட்டி விடுகிறார்கள்.

இப்படி அமையும் தொடர்மாடிகளை விற்பதும் கடினம். வாங்கியவருக்கு வீட்டின் தவணைகளைச் செலுத்துவதில் கஷ்டம் ஏற்படலாம். அல்லது வீட்டை அடைமானம் வைக்க நேரிடலாம். வேறு பல சிக்கல்கள் உண்டாகலாம்.

எனவே கட்டடத் தொழிலில் ஈடுபட்டு குடியிருப்பு மற்றும் வியாபார ஸ்தலம் கட்டுபவர்கள் வெறும் வடிவழகையோ, தோற்றப் பொலிவையோ, வியாபார இலாபத்தையோ மட்டும் பார்க்காமல், வாஸ்து சாஸ்திரத்தை அனுசரித்து சரியான வீட்டின் வரைபடத்தை உருவாக்கிக் கொண்டு, வீடுகள் அல்லது தொடர்மாடிகள் கட்ட வேண்டும்.

ஒரு கட்டடக் கலைஞன் கட்டடக்கலை மட்டுமின்றி வாழ்க்கைக்கு தேவையான இதர கலைகளிலும் தேர்ச்சி பெற்றவனாக இருக்க வேண்டும். அவனது அறிவின்மையோ அல்லது எல்லாம் தெரியும் என்ற தவறான எண்ணமோ அவனது பலவீனமாகிவிடும். அவனுக்கு சமய நம்பிக்கையும் தெய்வ நம்பிக்கையும் இரக்கமுள்ள மனமும் இருக்க வேண்டும்.

கட்டட விஞ்ஞானம், பூமி சாஸ்திரம், பருவ நிலைகளை அறியும் சாஸ்திரம் போன்றவை அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். எல்லாவிதமான கணிதப்புலமையும் இருக்க வேண்டும். அவன் முதலில் ஒரு கலைஞனாக இருக்க வேண்டும்.

கட்டடம் கட்டும் திறமை அதற்கடுத்தது தான். அவனுக்கு கடந்த காலம் அனுபவம் நினைவிலிருக்க வேண்டும்.

அவன் யாரையும் வெறுக்கவோ, பகைக்கவோ கூடாது. சுயநலமும், சோம்பலும் அறவே அவனிடம் இருக்கக் கூடாது அவனுக்கு நல்ல உடல் ஆரோக்கியம் இருக்க வேண்டும். ஏமாற்றுதல், சூதாடுதல், குடித்தல், வன்முறை, கோபம் , பாரபட்சம் போன்ற தீய ஒழுக்கங்களும் அவனுக்கு இருக்கக் கூடாது.

அவ்வாறு கட்டடக் கலைஞர்களுக்குத் தேவையான குணாதிசயங்களை வாஸ்து சாஸ்திரம் விளக்குகிறது. அத்தகையோரால் கட்டடப்படும் வீடுகளும் வியாபார ஸ்தலங்களும் ஆலயங்களும் சுபீட்சமாக, சௌபாக்யமாக நீண்டகாலம் நிலைத்து நிற்கும்.




# மன்னார் மீனவர்கள் 350 பேருக்கு இந்திய அரசு உபகரணம் வழங்கியது

(பூந்தோட்டம்)

இடம்பெயர்ந்த மீள்குடியேறிய மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது மீன்பிடி படகு, வெளி இணைப்பு இயந்திரம், வலைத் தொகுதி ஆகியவை 175 மீனவர்களுக்கு தனித்தனியே வழங்கி வைக்கப்பட்டது. குறித்த ஒரு தொகுதி கடற்றொழில் உபகரணங்களுக்கு இருவர் வீதம் 350 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்விற்கு இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா, கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜீத சேனாரட்ன, வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிஸாட் பதீயுதீன், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (அ-266)

# ரயர் கடையில் பாரிய தீ; கடை முற்றாக நாசம்

(பூந்தோட்டம்)

வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்திருந்த ரயர் கடையொன்றில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட தீயினால் கடை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது

நேற்று முன்தினமிரவு கடும் வெடிப்பு சத்தங்களுடன் தீச்சுவாலை எழுந்ததை அடுத்து அப்பகுதி மக்கள் அச்சம் கொண்டு பொலிஸாருக்கு உடனடியாக தகவல் வழங்கியிருந்ததாகவும் அதனை அடுத்து ரயர் கடையில் தீ பிடித்துள்ளமை தெரியவந்ததை அடுத்து அயலவர்கள் மற்றும் பொலிஸார் துரிதமாக செயற்பட்டு தீயைக் கட்டுப்படுத்தியபோதிலும் கடை முற்றாக எரிந்துள்ளது

இதற்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் எக் காரணத்தால் தீ ஏற்பட்டது என்பது தொடர்பில் அறியப்படவில்லை. (அ-266)

# மாற்று வலுவுடையோர்களுக்கு பேருந்தில் ஆசன ஒதுக்கீடுகள்

## அரச, தனியார் பேருந்துகளில் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன

(பூந்தோட்டம்)

மாற்றுவலுவுடையோர்களுக்கான ஆசனங்களை ஒதுக்கும் ஸ்டிக்கர்கள் தனியார் மற்றும் அரச பஸ் வண்டிகளில் ஒட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்றது. மாற்றாற்றல் உடையோரின் ஆசனங்கள் அவர்களுக்கு சரியாக வழங்கப்படாமையால் பலத்த சிரமங்களை அவர்கள் எதிர்கொண்டு வருகின்றமையை அடிப்படையாக கொண்டு இச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச மாற்றாற்றல் உடையோர் தினம் நேற்று முன்தினம் வவுனியாவில் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மாவட்ட சமூக சேவை அலுவலகம் இணைந்து ஹண்டிகப் இன்ரநசனல் நிறுவனத்தின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்திருந்தபோதே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து வவுனியா பஸ்நிலையம், [illegible] செயலகம் முன்புள்ள முச்சந்தி, [illegible] சந்தி ஆகிய இடங்களில் குறியீட்டு நிகழ்வாக அனைவருக்கும் அணுகும் வசதி, விழிப்புணர்வு நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டதுடன் இதில் அனைவருக்குமான அணுகும் வசதிகள் கொண்ட கட்டடங்களை அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மாதிரி கட்டடங்கள் அமைக்கப்பட்டு அவை காட்சிக்கு வைக்கப்படுவதுடன் பொருத்தமற்ற கட்டடங்கள் உடைக்கப்பட வேண்டும் என்பதையும் குறியீடாக இதில் செய்கை முறையில் விளக்கிக்காட்டியிருந்தனர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், வவுனியா நகர பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். மகேந்திரன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ. ஸ்ரீநிவாசன், ஹண்டிகப் இன்ரநசனல் நிறுவன திட்டமுகாமையாளர் வி.பிறேம்குமார் , ஓகன் நிறுவன தலைவர் வே.சுப்ரமணியம், உளவளத்துணை ஆலோசகர் எஸ். அம்பிகைபாகன் மற்றும் அரசசார் பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (அ-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றரை இலட்சம் இராணுவம்...

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி நடத்திய கண்டனப் பேரணியின்போது இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட தாக்குதலை கண்டித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ். பஸ் நிலையம் முன்பாக நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது பூரண ஆதரவை வழங்கியதோடு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் ஜனநாயகத்தை கட்டியெழுப்ப தடையாகவுள்ள இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும்.

மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு எதிராகவும் .இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தொடர்ந்து போராட வேண்டும்.

இறந்தவர்களுக்கு தீபம் ஏற்றி அனுஷ்டிப்பதை யாரும் தடுக்க முடியாது.

இதனை இராணுவமும் இந்த அரசாங்கமும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

குமுதினி படகுப் படுகொலை, மண்டைதீவு படுகொலை, கொக்கட்டிச்சோலை படுகொலை போன்ற பல படுகொலைச் சம்பவங்கள், பல தாக்குதல் சம்பவங்கள், ஆட்கடத்தல் சம்பவங்கள் இந்த நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளது..

அவை தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படவில்லை.

இதுதவிர பயங்கரவாதத்தை ஒழித்தவர்கள் என்று இராணுவதினருக்கு முழத்துக்கு முழம் நினைவு தூபிகளும் வருடாவருடம் நினைவு தினமும் கொண்டாடுகின்றனர்.

ஆனால் தமது இனத்திற்காக போராடியவர்களை நினைவு கூர தமிழர்களுக்கு மட்டும் மறுப்புத் தெரிவித்து வருகிறது இந்த அரசாங்கம்.



வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் வெளியேற்றப்பட்டு ஜனநாயக சூழல் நிலை பெறவேண்டும்.

யுத்தம் முடிபிற்கு கொண்டு வரப்பட்டு மூன்று வருடங்களைக் கடந்துள்ள நிலையில் இலங்கை இராணுவத்தில் 75 வீதம் வடக்கில் நிலை கொண்டுள்ளது.

தேவைக்கு அதிகமாக இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதால் அனைத்து விடயங்களிலும் தலையீடு செய்கிறது.

இராணுவம் இங்கு நிலைகொண்டிருந்தால் ஜனநாயக சூழல் குழப்பமடையும். எனவே இராணுவத்தை இங்கிருந்து வெளியேற்றும் வரை எமது போராட்டம் தொடர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)


கேம்பிறிஜ் கலாசாலை
நவிண்டில்
1974




ஆரம்பம் :
10.12.2012 மாலை 3 மணிக்கு
குறிப்பு: இங்கு முன்பள்ளி வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

# கேம்பிறிஜ் கலாசாலை

## நவிண்டில்

- ✓ தரம் 01 முதல் தரம் 11 வரையான வகுப்புக்களுக்கு எமது பிரதேசத்தில் திறமையில் மேம்பட்ட பிரபல ஆசிரியர்களே கற்பித்து வருகின்றார்கள். ஒவ்வொரு பாடத்திற்கும் இரண்டு ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். அனைத்து வகுப்புக்களுக்கும் அலகுவினாக்கள், செயலட்டைகள் வழங்கப்படுகின்றன.
- ✓ 2013 ஆம் ஆண்டு தரம் 2 இலிருந்து தரம் 5 வரையான வகுப்புக்கள் மெல்லக் கற்போர்களுக்கு தனி வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கான கல்வி மேம்பாட்டிற்கு செயலட்டைகள் வழங்கி விசேட கவனம் எடுக்கப்படும். தரம் 6 இலிருந்து 11 வரையான வகுப்புக்கள் ஆண்கள், பெண்கள் எனத் தனிப்பிரிவுகளாக நடாத்தப்படும்.
- ✓ 2015 ஆம் ஆண்டுக்கான க.பொ.த (உயர்தரம்) கலை, வர்த்தகப் பிரிவு வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
  **ஆரம்பம்: 15.01.2013 மாலை 3 மணி**
- ✓ பிரபல ஆசிரியரால் இணையம் (Internet), மின்னஞ்சல் (E-mail) இணைய பக்கவடிவமைப்பு (Web-designing) என்பன கற்பிக்கப்படும்.
- ✓ 2013 ஆம் ஆண்டு முதல் தரம் 02 - தரம் 11 வரையான வகுப்புக்களுக்கு கணனிக் கல்வி அனைத்து மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும்.
- ✓ தரம் 5 இற்கான புலமைப்பரிசில் வழிகாட்டி வகுப்புக்கள் தரம் 04 இல் ஆரம்பிக்கப்படும்.
- ✓ தரம் 10 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களுக்கு தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமயம், வரலாறு, ஆங்கிலம் எனும் முதன்மைப் பாடங்களுடன் தமிழ் இலக்கியம், புவியியல், வர்த்தகம், சுகாதாரம், ICT ஆகிய தொகுதி பாடங்களும் கற்பிக்கப்படுகின்றது.
- ✓ தரம் 10, தரம் 11 வகுப்புக்களுக்கு 2013 ஆம் ஆண்டு தொடக்கம் ஆங்கில இலக்கியம் கற்பிக்கப்படும்.

**தரம் 08 தொடக்கம் தரம் 11 வகுப்புக்களுக்கு விசேட ஆங்கில வகுப்புக்கள் சுதா ஆசிரியரினால் சனி, ஞாயிறு தினங்களில் காலை நடைபெறும்.**

- ✓ விஞ்ஞான ஆய்வுகூடம், கணித மூலவளநிலையம், நூலகம், மேந்தலை எறியி (O.H.P) மூலமாக நவீன முறையில் கற்பித்தல் நிகழ்த்தப்படுகின்றது.
- ✓ ஒவ்வொரு வகுப்பிலும் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களையே அனுமதிக்கவுள்ளதால் முதலில் பெறப்பட்டு பூரணப்படுத்தப்பட்டு ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நிர்வாகி

## 2013 ஆம் ஆண்டிற்கான அனுமதி விண்ணப்பப் படிவங்கள்

**10.12.2012 ஆம் திகதிக்கு முன்னர் கலாசாலையின் அலுவலக நேரமான திங்கள் தொடக்கம் ஞாயிறு வரை மாலை 3 மணியிலிருந்து 6 வரையிலுமான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

கலாசாலைக்கான வாகனப் போக்குவரத்து விபரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| 01. கந்தசாமி அருணகிரிநாதன் (நாதன்) | : தொ.பே: 0776510205, வாகன இலக்கம் : 51- 4090 |
| செல்லும் பாதை ஒழுங்கு 1 | : மண்டான், மூத்த விநாயகர் கோயிலடி, கிரீப்பல்லி, நாவலர் மடம். |
| செல்லும் பாதை ஒழுங்கு 2 | : கிழவித் தோட்டம், சம்பந்தர்கடை, அரசடி, நெல்லியடி, வதிரி |
| செல்லும் பாதை ஒழுங்கு 3 | : கரவெட்டி கிழக்கு, அரசடி, நெல்லியடி, வதிரிச்சந்தி, அல்வாய் ஊடாக கலாசாலை |
| விலாசம் | : வீரபத்திராயன் கரணவாய் தெற்கு, கரவெட்டி. |
| 02. செ.முருகானந்தம் (சந்திரன்) | : தொ.பே: 0776916658, வாகன இலக்கம் - 29-7204 |
| செல்லும் பாதை ஒழுங்கு | : தொண்டைமானாறு, கெருடாவில், உடுப்பிட்டி, நவிண்டில் |
| விலாசம் | : கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு |
| 03. ச.பாலேந்திரன் | : தொ.பே: 0776153847, வாகன இலக்கம் 50ஸ்ரீ 4683 |
| செல்லும் பாதை ஒழுங்கு | : விக்னேஸ்வராக் கல்லூரி, கீரிப்பல்லி, கல்லுவம், செல்வாபுரம், மூத்த விநாயகர் கோயிலடி, குஞ்சர் கடை |
| விலாசம் | : நுகவில் விக்னேஸ்வராக் கல்லூரி வீதி, கரணவாய் கிழக்கு. |
| 04. வே.சுந்தரலிங்கம் | : தொ.பே: 021 226 3612, வாகன இலக்கம் : HB 6053 |
| செல்லும் பாதை ஒழுங்கு | : தொண்டைமானாறு, கெருடாவில், வல்வெட்டி, உடுப்பிட்டி |
| விலாசம் | : பீடாக் கடை, உடுப்பிட்டி. |

குறிப்பு: எப்பிரதேசத்தில் இருந்தும் கலாசாலைக்கு வருவதற்கு வாகன வசதி தேவைப்படின் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும்.

2012 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளி (148) இற்கு மேல் பெற்ற மாணவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. உ.ஆர்நிகன் 170 | 02. ஜெ.நிதுஷன் 162 | 03. வி.புஸ்பதா 164 | 04. தே.டெறின் 164 |
| 05. சு.கலாதரன் 162 | 06. பா.புவீந்திரன் 160 | 07. ர.சைந்தன் 160 | 08. ஜெ.விதுர்ஷிகா 157 |
| 09. க.இனோஜ் 152 | 10 ச.றெனோசன் 149 | 11. ஏ.அபிராமி 148 | |

- பரீட்சைக்குத் தோற்றியோர் : 60 பேர்
- 148 இற்கு மேல் : 11 பேர்
- 100- 148 : 40 பேர்
- 70-100 : 09 பேர்
- சித்தி சதவீதம் - 100%

(1078)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மாணவர்களை...

நாங்கள் புலிகளை அழிக்கிறோம் என்று தமிழ் மாணவர்களை புலிகளாக்கி விட்டிருக் கிறோம்.

26ஆம் திகதி மாலையிலிருந்தே சக தமிழ் மாணவிகளின் கண்களில் ஒருவித வெறி ஏறியிருந்தது. மாணவர்களைபடையினர் தாக்க மாணவிகளே புலிகளுக்கான விளக்கு களை ஏற்றினார்கள்.

தாமுண்டு தமது படிப்புண்டு என்று திரிந்த தமிழ் மாணவிகள் அன்று திடீரென புலிகளாக மாறியிருந்தார்கள். அவர்கள் கைகளில் துப் பாக்கி மட்டுமே இல்லை. உணர்வால் புலி களாகவே இருந்தார்கள்.

மாலை 6.05க்கு படையினர் தாக்க தாக்க மாணவிகள் விளக்கை ஏற்றியபோது தமிழர் கள் என்றுமே எம்மால் வெல்லப்பட முடியாத வர்கள் என்ற உண்மையை முழுமையாக உணர்ந்தேன்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு நன்றி. இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவியொருவர் டுவிட்டரில் தனது கருத்தை பதிவு செய்துள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## மருத்துவ பீட...

கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி மாண வர்களினால் முன்னெடுக்கப்பட்ட கண்டப்பேரணி யில் இராணுவத்தினரும் கலகமடக்கும் பொலி ஸாரும் மூர்க்கத்தனமாக தாக்குதல் மேற் கொண்டதோடு, திருநெல்வேலியில் உள்ள ஸ்ரீ ரெலோ காரியாலயம் மீது மாணவர்கள் பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொண்ட னர் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் நான்கு மாணவர்கள் மறுநாள் 29ஆம் திகதி கைது செய்யப்பட்டு பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் நேற்றுக் காலை ஒரு மாண வன் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதனை பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளும் உறுதிப்படுத்தினர். (எ-6)

## அரசுக்கும் நீதித்...

அடுத்த விசாரணை நாளை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல் மற்றும் முறைகேடுகளில் ஈடுபட் டார் என்று கூறி அவர் மீது அரச தரப்பு 14 குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது. தம் மீதான குற்றச்சாட்டுக்கள் உண்மையற்றவை என்றும் நிதி முறைகேடுகள் எதிலும் தான் ஈடுபடவில்லை யென்றும் தனது வழக்கறிஞர்கள் மூலம் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆனால் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நாடாளுமன்றத் தேர்வுக் குழுவினர் விசாரித்து தீர்ப்பளிக்கும் வரை ஷிராணி பண்டார நாயக்க பதவியிலிருந்து விலகியிருக்க வேண்டும் என ஆளும்கட்சியின் வழக்கறிஞர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால் தான் பதவி விலகப் போவதில்லை யென்று தலைமை நீதிபதி திட்டவட்டமாக தெரி வித்துள்ளார்.

இலங்கையின் நீதித்துறை சுயாதீன மான தீர்ப்புகளை வழங்கி வருவதாக அரச தரப்பால் இலக்கு வைக்கப்படுகிறது என்று தலைமை நீதிபதியின் ஆதரவாளரும் அரசியல் சாசன வழக்கறிஞருமான ஜே.சி.வெலியாமுன தெரி வித்துள்ளார்.

இலங்கையில் இருக்கும் அனைத்து அமைப் புக்களிலும் இதுவரை நீதித்துறை மட்டுமே சுயா தீனமான அமைப்பாக இருக்கிறது என்று சுட்டிக் காட்டும் அவர் அதன் காரணமாகவே இவ்வகை யான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என வும் கூறுகிறார்.

எனினும் உச்ச நீதிமன்றத்துக்கு முன்பாக அரசுக்கு ஆதரவானவர்கள் தலைமை நீதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

எவ்வாறாயினும் ஜனநாயகத்தின் இரு தூண்களாக இருக்கும் நீதித்துறை மற்றும் நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கு இடையேயான மோதல் வலுத்து வருகிறது என்பதே யதார்த்த மாக உள்ளது. (எ-11)

## மௌனமாக இரு...

நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறி னார்.

அவர் மே[illegible]ம் உரையாற்றுகையில்,

தமிழர்களுடைய கல்வி திட்டமிட்டு அழிக் கப்பட்டு வருகின்றது. அவற்றில் ஒரு அடை யாளமாகவே யாழ்.பல்கலைக்கழக மாணவர் கள் மீதான காட்டு மிராண்டித்தாக்குதல்.

குற்றமேதும் புரியாத மாணவர்களை கைது செய்து முழங்காலுக்கும் மொட்டந்தலைக் கும் முடிச்சுப் போட்டு தடுப்புக்காவலில் தடுத்து வைத்துள்ளனர்.

எம்முடைய வருங்காலதலைமுறையினை வழிநடத்த வேண்டிய நாளைய தலைவர்கள் இன்று சிறையில் வாடுகின்றனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது நாம் மௌனித்து இருந்தால் எமது கல்வி அழிக்கப்பட்டு நாம் தொடர்ந்தும் அடிமையாகவே வாழ வேண்டிய சூழ்நிலை காணப்படும்.

எமது கல்வியினை மீட்டெடுப்பதற்கும், எமது மாணவர்களின் பாதுகாப்பினை உறு திப்படுத்துவதற்கும் நாம் தொடர்ச்சியாக போராட வேண்டியவர்களாக உள்ளோம் என் றார் அவர். (எ-4,6)


**கிறிஸ்ரல் சென்ரர்**

நெல்லியடி கொமஷியல் வங்கி அருகாமை

**புதிய கல்வி ஆண்டு 2013**

தரம் 5, 9, 10, O/L ஆகிய வகுப்புகள்

ஆரம்பம் 2012-12-09 மு.ப. 9.00 (ஞாயிறு)

**Note :**
12ம் திகதிக்கு முன் அனுமதிகளைப் பெறும் மாணவர்களுக்கு அனுமதிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது (C-1663)

தொடர்பு : 077 5133990

மிகவிரைவில் A/L Day Class ஆரம்பம்

---

**பிரத்தியேக வகுப்புகள்**

- கணிதம்
- ஆங்கிலம்

K. யோகேந்திரன் பிரபல ஆசிரியர்

வகுப்பு : 9, 10, O/L

கிறிஸ்ரல் சென்ரர் - நெல்லியடி 2012-12-09 மு.ப 9.00

CAN வைத்தியசாலை அருகில் ரொட்டியாலடி, சுன்னாகம் 2012-12-03 பி.ப 3.00

நெசவுசாலை வீதி - தெல்லிப்பளை 2012-12-09 பி.ப 4.00

அம்மன் கோவிலடி கல்வியங்காடு 2012-12-05 பி.ப 5.00

(C-1663)

---

**பிரத்தியேக வகுப்பு**

O/L 2013, தரம் 10, 9, 8 மாணவர்களுக்கு கணிதம் Aக்கு சங்கர் ஆசிரியரினால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

- Best art of teaching
- Rs 200 per hour

தொடர்பு: 0776597370

Jaffna

(109)

---

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் புதிதாக இயங்கிவரும் Optimo International கம்பனிக்கு பணிபுரிய அலுவலக ஊழியர்கள் தேவை. தகுதிக்கு ஏற்ப பயிற்சி வழங்கப்படும். பயிற்சி காலத்தில் 15,000 ரூபாய் சம்பளமும் பின் 38,000 ரூபாய் சம்பளமும் பெறலாம். அனுபவம் அவசியம் இல்லை.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தங்குமிடம் இலவசம். தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்.

077 8330074, 0778933786, 021 7212045

(1675)

---

25வது வருட கல்விச் சேவையில்....

**புதிய நாவலர் கல்வி நிலையம்**

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

**புதிய கல்வியாண்டு - 2013**

தரம் 1 முதல் O/L வரை

ஆரம்பம் : 09-12-2012 ஞாயிறு 9.00மணி

அனுமதிகள் இன்று முதல்...


---

சிவ சித்தர் குருகுலம்

**EASY ENGLISH**

விபரங்கள் + பெயர்பதிவு :773 212 711


## மரண அறிவித்தல்



**குமாரவேலு வேலுப்பிள்ளை**

காரைநகர் பாலாவோடை களபூமியைப் பிறப்பிடமாகவும், திரு நெல் வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு வேலுப்பிள்ளை (03.12.2012) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சண்முகம், அன்னம்மா ஆகியோரின் சகோதரனும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் மைத்து னரும், தனபாலசுந்தரம் மோகனாம்பிகை, லோகநாதன், பேரின்பநாயகம், குமாரலிங்கம், இராசேஸ்வரி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாதசுந்தரம், சரோஜினிதேவி, தவமலர், சிவசோதி, சிவஅம்பிகை, இராச லட்சுமி, தவநிதி ஆகியோரின் அன்பு மாமனும், தவராச்சா, தினேஸ்குமார், யோகேஸ்வரன், அனுசா, கோகுலன், செந்தில்குமரன், தவக்குமரன், தீபிகா, சிவசங்கர், கஜமுகன், மீனரஞ்சினி, திருக்குமரன், திருச்செந்தூரன், பிரணவன், ரஞ்சினி, நேசினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.12.12 வியாழக்கிழமை காலை 7 மணியளவில் நடைபெற்று காலை 9 மணியளவில் காரைநகர் களபூமி தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.527, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்: மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
0773903255, 0213006733

(சி-1097)


**காவேரி சில்க்ஸ்**

வழங்கும்

மலிவு விலையில்

இன்று முதல்

**மாபெரும் விற்றுத் தீர்த்தல்**

Mega Clearance Sale

எமது ஸ்தாபனம் கணினி மயப்படுத்தப்பட்ட அதி நவீன வசதிகளுடன் மெருகூட்டப்பட இருப்பதால்

சகல

- ⇨ பட்டுப்புடைவைகள், அனைத்துரக சேலை வகைகள்,
- ⇨ பஞ்சாபி, ஸ்கேட், பிளவுஸ், கவுண் வகைகள்,
- ⇨ விதவிதமான சேட், சூட்டிங், வேட்டி வகைகள்,
- ⇨ குழந்தைகளுக்கேற்ற றெடிமேட் உடுப்பு வகைகள்

SALE SALE

இன்னும் ஏராளம்... ஏராளம்... ஏராளம்

அனைத்தும் மலிவு விலையில் விற்றுத் தீர்த்தல்

Mega Clearance Sale

New Collection




(சி-1673)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org